

Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்

# கண்ணோட்டம்

KANNODDAM

வெளியீடு :- 69 | 01 பெப்ரவரி 2016 | விலை ரூபா :- 10.00



பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்

கட்சியின் கருத்துக்கள் செய்திகளை அறிய

http://www.eprlfnet.com

Eprlf Pathmanaba

https://twitter.com/EPRLF


## ஒற்றையாட்சிக்கு உள்ளேதானாம் அரசியற் தீர்வு

# வேண்டுமா? வேண்டாமா?

### தமிழர்கள் பதில்காண வேண்டிய இன்றைய சவால் இதுவே





இலங்கை ஜனாதிபதி சிறிசேனாவும் பிரதமர் ரணிலும் ஒற்றை யாட்சிக்குள்ளே தான் இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வு காணப்படும் என அடித்துக் கூறிவிட்டார்கள்.

இலங்கையின் அரசியல் யாப்பில் உள்ள ஒற்றையாட்சி என்ற பதத்தை நீக்குவதோ மாற்றுவதோ! அல்லது பௌத்த மதத்திற்கு அரசியல் யாப்பில் கொடுக்கப்பட்டுள்ள முன்னுரிமையை - முதல் தர நிலைமையை- மாற்றுவதோ நீக்குவதோ! இந்த இரண்டு விடயங்களிலும் இலங்கை தழுவிய சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுவது அரசியல் சட்டப்படி அவசியமாகும்.

இப்பொழுது உள்ள அரசாங்கம் நடைமுறையில் இருக்கும் அரசியல் யாப்பை நீக்கிவிட்டு புதியதொரு அரசியல் யாப்பைப் பிரதியீடு செய்வதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளது. அதற்காக பாராளுமன்றத்தை ஓர் அரசியல் யாப்பு சபையாக அறிவித்துள்ளது. ஏற்கனவே பிரதமர் ரணிலினால் நியமிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவக் குழு புத்திஜீவிகளை பரந்து பட்ட ரீதியில் சந்திக்கிற வேலையை ஆரம்பித்துள்ளது மகிந்த ராஜபக்ஷ அவர்களும் அவருக்கு சார்பாகவுள்ள விமல் வீரவன்ஸ, உதய கம்பன்பில்ல போன்றோரும் சிங்கள பொது பலசேன, சிங்கள தேசபத்த இயக்கம், சிங்க லே ஆகிய அமைப்புக்களை போன்ற அமைப்புக்கள் எல்லாம் புதிய அரசியல் அமைப்பு தொடர்பான அரசாங்கத்தின் ஆக்க பூர்வமான முயற்சிகளுக்கு ஏற்கனவே சிங்கள இனவாதத்தை கிளப்பி கட்டை போடத் தொடங்கி விட்டன.

இந்த நிலையில் ஒற்றையாட்சி என்பதனை மாற்றுவதற்கான சர்வசன வாக்கெடுப்பிற்கு போனால் மிகப் பெரும்பான்மையான சிங்கள மக்களின் எதிர்ப்பு வாக்குகளையே அது அதிகமாகப் பெறும். அது அரசியல் யாப்பு தொடர்பான ஒரு விதியை மாற்றுவதற்கான தோல்வியாக மட்டும் கருதப்படமாட்டாது. மாறாக, மைத்திரி - ரணில் கூட்டு

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

## மாகாண சபை முறையை எதிர்த்தோம் – ஜனாதிபதி

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போது நாமும் அதனை எதிர்த்தோம் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டை முன்கொண்டு செல்வது பற்றிப் பரந்துபட்டு சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ள நிலையில் கடந்த காலங்களில் எடுத்த தீர்மானங்களை மீளாய்வு செய்வதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஜாவத்தையில் உள்ள தனது இல்லத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே ஜனாதிபதி மேற்படி விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

'புதிய அரசியலமைப்பு வடக்கிலும் தெற்கிலும் உள்ள அடிப்படைவாதிகளின் தேவைகளை நிறைவேற்ற அல்ல வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் ஏற்றுக்கொள்ளும், தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் அரசியல் மறுசீரமைப்பு ஒன்றையே நாம் மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



வெங்காயம், சீமெந்து கிட்டங்கிகளில் கூலிகளாக வேலைசெய்யும் எம் இலங்கைத் தமிழ் இளைஞர்கள்

## இலங்கை தமிழ் அகதிகளின் தயக்கம்

ஜனவரி 12ஆம் திகதி சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களிலிருந்து இலங்கை தமிழ் அகதிகள் 41 பேர் கொழும்பை வந்தடைந்தனர். இவர்களில் 26 பேர் பெண்கள்

தமிழ் நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை பற்றி வெவ்வேறு தரப்பிலிருந்து மாறுபட்ட தகவல்கள் வெளியிடப்படுகின்ற போதும் இந்திய மத்திய உள்துறை அமைச்சின் 2014 - 2015 ஆண்டு அறிக்கையில் 2014 டிசம்பர் 31 இல் 65 ஆயிரம் அகதிகள் 130 முகாம்களில் வசிப்பதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு முகாம் ஒரிசாவில் உள்ளது 15 ஆயிரம் அகதி கள் முகாம்களுக்கு வெளியில் வாழ்கின்றனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகதிகள் 2011 இல் 1728 பேரும் 2012 இல் 1291 பேரும் 2013 இல் 818 பேரும் 2014 இல் 338 பேரும் 2015 இல் 429 பேரும் இலங்கை திரும்பியுள்ளனர்.

தாயகம் திரும்பும் அகதிகளுக்கு 6 மாதங்களுக்கு உலருணவு வழங்குவதற்கான திட்டத்திற்காக உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தை அணுகியிருப்பதாகவும் அவர்களின் பங்களிப்பு கிடைக்காவிடின் எமது வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டின் மூலம் 3 மாதங்களுக்கான உணவுப்பங்கீட்டை நாம் வழங்குவோம் எனவும் மீளக் குடியமர வருபவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு இந்தியாவின் உதவியை கோரியிருப்பதாகவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, இந்து சமய விவகார அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

தாயகம் திரும்புபவர்களின் பிள்ளைகள் கல்வியை தொடர்வதில் உள்ள கெடுபிடிகள், பிரச்சினைகளும் சித்தியடைந்த பிள்ளைகள் இலங்கையில் வேலைவாய்ப்பை பெறுவதில் உள்ள தடைகளும் அகற்றப்பட வேண்டும். இவை அகதிகள் தாயகம் திரும்புவதில் காட்டும் தயக்கத்திற்குப் பிரதான காரணங்களாகும்.

## யாழ், கிளிநொச்சி விவசாயிகளின் குறை

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கையின் போது பல்வேறு வகையான நோய்கள் பரவி நெற்பயிர்ச் செய்கையை பாதித்திருப்பதாக தெரிவித்துள்ள விவசாயிகள் விவசாயத்திற்குத் தேவையான பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களின் ஆலோசனையின்படியே இந் நோய்களை கட்டுப்படுத்துவதற்கான கிருமிநாசினிகளை வாங்கி பயன்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளனர். நெல் வயல்களில் நோய்த் தாக்கம் இருப்பதை கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களத்தை சேர்ந்த உத்தியோகத்தர்களும் உறுதிப்படுத்தியிருந்தனர்.

யாழ் மாவட்டத்திலும் விவசாய இரசாயனங்களை விற்பனை செய்யும் கடைகளில் விவசாயிகள் ஆலோசனை கேட்பதையும் வியாபாரிகளின் ஆலோசனைப்படியே களைநாசினிகள், கிருமிநாசினிகள், பூச்சிநாசினிகளை வாங்கிச் செல்வதையும் காணமுடிந்தது.

(தொடர்ச்சி 9 ம் பக்கம்)

## கருத்தரங்கு : அரசியல் யாப்பு உருவாக்கம்

அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பான கருத்தரங்கும் கலந்துரையாடலும் யாழ்ப்பாணத்திலுள்ள பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் காரியாலயத்தில் ஜனவரி 31 ம் திகதி நடைபெற்றது.

பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பொதுச் செயலாளர் தி.சிறீதரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் அனுபவங்கள். சாத்தியங்கள், கோரிக்கைகள் என்ற தலைப்பில் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள் கருத்துரை வழங்கினார்.

அவர் தனது உரையில் இந்த நாட்டிற்கு சமஸ்டி அடிப்படையிலான அரசியலமைப்பு சிறந்தது, ஆனால், நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள் என்ற பிரசாரத்தை புதிய அரசியலமைப்பிற்கும், அதிகாரப் பகிர்வுக்கும் எதிரான சக்திகள் தெற்கில் தீவிரப் படுத்தியிருக்கிறார்கள் ஜனாதிபதி, பிரதமர்



உட்பட தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் ஒற்றையாட்சி நீக்கப்படாது, புத்த மதத்திற்குள்ள முக்கியத்துவத்தைக் குறைக்க மாட்டோம் என்று தெரிவிக்கின்றனர்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஒற்றையாட்சியை ஏற்கமாட்டோம் என்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சமஷ்டியை விடமாட்டோம் என்றும் கூறுகின்றனர்.

(தொடர்ச்சி 9 ம் பக்கம்)


சொன்னதை செய்த முதல்வர் பக்கம்-02



உலக சொத்துக்கள் சிலரிடம் பக்கம்-03



உலக பயங்கரவாத அமைப்புக்கள் பக்கம்-04




தோழர்களை நினைவு கூருவோம் பக்கம்-07



அமெரிக்க அதிபரின் பாதை பக்கம்-08




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்
KANNODDAM
294, கண்டி வீதி, முகத்துவாரம், யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022



## இருப்பதையும் இழப்பதற்கான பாதையில் பயணிக்க வேண்டாம்

தமிழ் அரசியற் தலைமைத்துவம் புத்திக் கூர்மையுடனும் தீர்க்க தரிசனத்துடனும் நடந்து கொள்ள வேண்டிய ஒரு கட்டம் மீண்டும் ஒரு தடவை தமிழர்களின் வரலாற்றில் வந்திருக்கிறது தெளிவு.

நிராகரிப்பு வாதம் இருப்பதையும் இழக்கச் செய்யும் அபாயத் தைக் கொண்டது.

இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான காலத் திலும், சந்திரிகா அம்மையார் ஒற்றையாட்சியை நீக்கிய முறை யிலான தீர்வை முன் வைத்த காலத்திலும், ஒஸ்லோவில் இலங்கை அரசாங்கம் சமஸ்டி முறையில் தீர்வினை ஏற்படுத்த ஒப்புக் கொண்ட வேளையிலும் தமிழ் தரப்பின் நிராகரிப்பு வாதம் கிடைத்த சந்தர்ப்பங்களை இழக்க வைத்த இறந்த கால கவலைகளாகிப் போனது.

தற்போது இலங்கை அரச கட்டமைப்புக்கான புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்தில் பதட்டமான சூழ்நிலையை உருவாக் கினால் 13வது திருத்தத்தின் அடித்தளத்தையும் ஆட்டங் காணச் செய்ததாகிவிடும்.

13 வது திருத்தம் மூலம் வந்த தீர்வின் அனுபவம் பற்றிய எமது அலட்சிய மனோபாவம் ஆபத்தானது. மறுபுறம் தென்னிலங்கையில் அதிகாரப் பகிர்வில் அக்கறை உள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் நாம் பலவீனப் படுத்தியவர்களாக ஆகிவிடக் கூடாது.

இலங்கையின் இன சமூகங்களின் வாழ்வையும் ஜனநாயக மயப்படுத்துவது மக்கள் சுயமரியாதை கௌரவத்துடன் வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது முதற் பணியாகும்.

தமிழ் சந்தர்ப்பவாத அதி தீவிரவாதம் மறுபுறம் சிங்களத் தரப்பில் அதி தீவிரவாத சக்திகளைப் பலப்படுத்துகிறது.

யாழ் மைய வாத தமிழ்த் தேசியமானது வன்னி மற்றும் கிழக்கு வாழ் தமிழர்கள், பற்றியோ மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லீம் மக்கள் பற்றியோ சாதாரண சிங்கள மக்கள் பற்றியோ எந்தப் பிரக்ஞையும் கொண்டதல்ல.

இந்தக் குரூரமான தமிழ்த் தேசியத்தை வைத்து அரசியல் வியாபாரம் பண்ணுபவர்கள் இந்திய மற்றும் உலகளாவிய நிலைமைகளைக் கூட கருத்திற்கெடுப்பதில்லை.

குறுகிய அரசியல் வெறிப் போதை கொண்டவர்கள் தமிழ் உணர்ச்சி உடுக்கை அடித்து தமிழர்களை தலை சுத்த வைத்து கலையெழுப்பி தேர்தல்களின் போது மக்களின் வாக்குகளை சுலபமாகக் கொள்ளையடிப்பதே இந்தக் குரூர தமிழ் தேசியத்தின் குணாம்சம்.

உள்ளூரில் பதவிகளைக் கைப்பற்றுவதற்கும் அவற்றைத் தக்க வைப்பதற்காகவுமே அது இடையறாது முயல்கிறது.

யதார்த்தத்தில் தெரிவதற்கும் தமது தலையில் ஏறியிருக்கும் போதை மயக்கத்தால் காண்பதற்கும் இடையே உள்ள வேறு பாடுகளைப் புரிந்து கொள்ள முடியாத சக்திகள் அதனை ஆதரிக்கவும் செய்கின்றன. இவ்வாறானர்களுக்கு திட்ட வட்டமான அரசியல் பொருளாதார ஆதாயங்களும் உள்ளன என்பது இன்று பரகசியம்.

இது எங்கே போய் முடியும் என்பது அக்கறை எதுவுமின்றி தமது பத்திரிகைகளின் நாளாந்த வியாபாரம் நன்றாக நடந்தால் போதும் என செயற்படும் கொள்கையற்ற ஊடகங்களும் அதற்கு ஒத்தூதுகின்றன.

தமிழ் தேசிய அரசியலின் வங்குரோத்திலிருந்து தான் இந்த போலித்தனங்கள் பிரசவிக்கின்றன. ஒன்றுபட்டு திரண்டு நிற்க வேண்டிய இன்றைய காலகட்டத்தில் முரண்பாடுகளும் பேதங்களும் இவ்வாறு தான் உருவாகி தலை தூக்குகின்றன.

இயல்பாக உருவாகிய தமிழ் தலைமைத்துவங்கள் அழிக்கப் பட்டதுவும் இத்தகைய சக்திகள் உருவாகக் காரணமாக அமைந்ததெனலாம்.

அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடியவர்கள் இன்றும் இருக்கவே தான் செய்கிறார்கள். ஆனால், இவர்களைப் பற்றிய தேடல் - அறிதல் - உணர்தல் சமூக மட்டத்தில் அரிதாகவே உள்ளது.

சமூகத்தின் அரசியல் உணர்வு மட்டம் உயர வேண்டும். மக்களுக்காக எதையும் அர்ப்பணிக்காத, எதனையும் காரிய பூர்வமாக சாதிக்கும் வல்லமையற்ற வெறும் ஏமாற்று சொற் சிலம்பக் காரர்களை மக்கள் தங்கள் தலைவர்களாகத் தெரிவு செய்யும் வழமையை மாற்றுவார்களா?

குறிப்பு:- ஜனவரி மாத பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தின் தலைப்பு தலைவர்களுக்குத் தேவை நிதானம் - விவேகம் - சமூகப் பொறுப்புணர்வு என வந்திருக்க வேண்டும். தவறாக அச்சிடப்பட்டிருந்தது.

## சொன்னதைச் செய்த முதலமைச்சர்




இந்தியாவின் சிக்கிம் மாநிலத்தின் முதலமைச்சர் பவன்குமார் சம்லிங் கடந்த 25 வருடங்களாக முதலமைச்சராக பதவிவகித்து வருகிறார். சிக்கிம் மக்கள் தொடர்ந்து 5 தடவைகள் அவரை முதலமைச்சராகத் தெரிவு செய்துள்ளனர்.

இவர் கடந்த 2003 ஆம் ஆண்டு சட்டசபையில் சிக்கிம் மாநிலத்தை இரசாயனம் இல்லாத இயற்கை விவசாய முறைக்கு மாற்றுவேன் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். சிக்கிம் மாநிலத்தில் இரசாயன உரங்கள் விற்கத் தடை விதித்தார் தடையை மீறு வோருக்கு அபராதம், சிறைத்தண்டனை என்பவற்றை கடுமை யாக அமுல்படுத்தினார்

12 வருட கடும் உழைப்பிற்கு பிறகு 2016 ஆம் ஆண்டு சிக்கிம் மாநிலம் முழுவதும் உள்ள 75 ஆயிரம் ஹெக்டயர் நிலமும் இரசாயனம் அற்ற இயற்கை பூமியாக மாற்றப்பட்டுள்ளது.

## இந்திய குடியரசு அரசியல் யாப்பின் சிற்பி அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளி



ஜனவரி 26 இந்திய குடியரசு தினம் இவ் வேளையில் அம்பேத்கார், அவரது பங்களிப்புகளுக்காகப் போற்றப்பட வேண்டியவர். அவரே இந்திய குடியரசு அரசியலமைப்பை வரைவதற்கான குழு வின் தலைவராகச் செயற்பட்டவர்.

அம்பேத்கார் இந்தியாவின் மத்தியப் பிர தேசத்தில் உள்ள "மோ" என்ற இடத்தில் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ம் திகதி பிறந்தார்

"மகர்" என்னும் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்த அவர் பாடசாலையில் தனி மண் பானையில் தண்ணீர் குடிக்க நிர்ப்பந்திக் கப்பட்டார். ஏனையோருடன் குதிரை வண்டியில் செல்லும்போது, தாழ்த்தப்பட்ட பிரிவினர் என்று தெரிந்தவுடன் இறக்கி விடப்பட்டார். இளம் வயதில் இது போன்ற பல்வேறு கஷ்டங்களையும் அவர் அனு பவிக்க நேர்ந்தது.

பீமராவ் சகபால் அம்பேவாதேகர் என் பது அம்பேத்கரின் இயற் பெயராகும். அவர் மீது அன்பும் அக்கறையும் கொண்ட பிராமண ஆசிரியரான மகா தேவ அம்பேத்கர் அவரின் குடும்பப் பெயரான அம்பேவாதேகர் என்பதை மாற்றி தன் குடும்ப பெயரான அம்பேத்கர் என்பதை அவரின் பெயரில் சேர்த்தார்.

பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் பரோடா மன்னரின் உதவியோடு உயர் கல்வியைத் தொடர்ந்த அம்பேத்கர் பொருளாதாரம், அரசியல், வரலாறு, தத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் தேர்ந்தவரானார் சுதந்திரமடைந்த இந்தியாவின் முதலாவது சட்ட அமைச்சராகப் பதவி வகித்தவர்.

சாதியமைப்பையும், தீண்டாமை கொடுமைகளையும் எதிர்த்து தீவிரமாக போராடிய அம்பேத்கர் அவர்கள், 1927 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தீண்டாமைக்கொடுமைகளை எதிர்த்து போராட்டத் தினைத் தொடங்கினார். 1930 ஆம் ஆண்டு தொடங்கிய நாசிக் கோயில் நுழைவு போராட்டத்தினை நடத்தி வெற்றிகண்டார். தீண்டாமை என்பது ஒரு சமூகப் பிரச்சனை மட்டுமல்லாமல், அது ஒரு அரசியல் பிரச்சினை எனவும் கருதிய அவர் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தையும் கொண்டுவந்தார். தீண்டாமை ஒழிப்பில் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

ஒரு நல்ல சமூகம் நிலவ வேண்டுமானால் சமூக நீதிகளைக் கொண்ட சட்டத்தை வைத்து மக்களை ஆளும் ஒரு நல்ல அரசு புறநிலையாகவும், மனிதனின் ஆன்மீக மேன்மையை வளர்க்கும் ஒரு மதம் அகநிலையாகவும் தேவை எனக் கருதினார். இதனால் பௌத்த மதத்திற்கு மாறிய அம்பேத்கார். 'திராவிட பௌத்தம்' என்ற பெயரில் தாழ்த்தப்பட்டவர் எனப்பட்ட தலித் மக்களை புத்த சமயத்தைத் தழுவச்செய்தார். 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் திகதி உயிரிழந்த அவரது உடல் பௌத்த முறைப்படி தகனம் செய்யப்பட்டது.

## தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும் , ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் :-

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

E P I C
P.O. Box 431
Sutton SM1 9LE
UK
email: eprlfp@yahoo.co.uk

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

294, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.
021 2222022

165, கடல்முக வீதி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில Vணக்காரர்கள் கைகளில் குவிந்திருக்கும்
# உலக சொத்துக்கள்

பசி, பட்டினி, போஷாக்கின்மை

இந்த உலகில் 10 சதவீதமான மக்கள் ஒரு நேர உணவுடனேயே நாளைக் கழிக்கின்றனர். 20 சதவீதமான மக்கள் மூன்றாவது வேளை சாப்பாடு கிடைக்காமலே தான் தூங்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆசிய நாடுகளிலுள்ள பெண்களில் 20 சதவீதத்துக்கு மேற்பட்டோர் இரத்தச் சோகை பிடித்தவர்களாக உள்ளனர். 100 கோடி மக்கள் ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்குத் தேவையான அளவு உணவு கிடைக்காமல் போஷாக்கற்றவர்களாக உள்ளனர். இதில் 30 கோடிப்பேர் சிறுவர்கள். உப-சஹாரன் ஆபிரிக்காவில் 20 சதவீமானவர்கள் போசாக்கின்மை காரணமான நோய்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.



2915 ஆம் ஆண்டு உலகின் பெரிய பணக்காரர்கள் வரிசையில் 3 ஆவது இடத்தைப் பிடித்தவர் அமெரிக்காவை சேர்ந்த வாரென் பவெற் (Warren Buffe..) இவரது சொத்தின் தேறிய மதிப்பு 72.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

### குடிப்பது அசுத்தமான நீர்

இவ்வுலகில் 100 கோடி மக்கள் அசுத்தமான நீரையே குடிக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். வருடாந்தம் சுமார் 70 லட்சம் பேர் அசுத்த நீரைக் குடிப்பதால் பாவிப்பதால் ஏற்படும் பல்வேறு நோய்களின் காரணமாக சாகிறார்கள்.

### ஒழுங்கான வீடு இல்லை

உலக மக்கள் தொகையினரில் கால் வாசிக்கு மேற்பட்டோருக்கு இன்னமும் ஒழுங்கான வீட்டு வசதிகள் இல்லை. 100 கோடிப் பேர் வாழுவதற்கு எந்த வகையிலும் தகுதியற்ற குடிசைகளில் பூச்சி பூரான்களோடு கட்டாந்தரைகளில் பல்லிகளும் பாம்புகளும் குடியிருக்கும் கூரைகளின் கீழ் தமது சீவியங்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். 10 கோடிப் பேருக்கு வீடே இல்லை அவர்களுக்கு வானமே கூரை, வீதியோரங்களே அவர்களின் படுக்கைகள்.

### சேரி நகர வாழ்க்கை

குறைபாடான பொருளாதார வளர்ச்சி நிலையைக் கொண்ட பின்தங்கிய நாடுகளில் உள்ள பெரும்பாலான நகரங்களில் வாழ்வோரில் 80 சதவீதமானோர் குப்பைகளும் ஏனைய எல்லா அசுத்தங்களும் நெருக்கடிகளும் நிறைந்த சேரிகளிலேயே சீவிக்கின்றனர். கறுப்பர்களின் ஆபிரிக்காவில் 20 கோடிப் பேரும் தென்னாசியாவில் 20 கோடிப் பேரும், கரீபியன் மற்றும் தென்னமெரிக்க நாடுகளில் 11 கோடிப் பேரும் தென்கிழக்காசிய நாடுகளில் 9 கோடிப் பேரும் சேரிகளிலேயே சிவிக்கின்றனர்.

### மலசலகூடங்கள் இல்லை

இந்தியா சுதந்திரமடைந்து எழுபது ஆண்டுகள் ஆகப்போகிறது. ஆனால் இன்னமும் எழுபது சதவீதமான வீடுகள் தமக்கான மலசல கூடம் அற்றவையாகவே தான் உள்ளன. உலகம் முழுவதுமான கணக்கெடுப்பின்படி கிட்டத்தட்ட 250 கோடி மக்கள் தமக்கென மலசல கூட வசதியற்றவர்களாகவே வாழ்கின்றனர்.



### வியப்புக்குரிய உலகின் மறுபக்கம்

மேலே கூறப்பட்டுள்ள வேதனையான துயரகரமான நிலைகள் ஒரு பக்கம் இருக்கையில் மறுபக்கம் இந்த உலகில் சொத்துக்களும் வசதிகளும் வாய்ப்புக்களும் ஒரு சிறிய பகுதியினரிடம் வியப்புக்குரிய விதமாக குவிந்து கிடக்கிறது. உலக சொத்துக்கள் எவ்வாறு பகிரப்பட்டிருக்கின்றது என்பது பற்றிய ஆய்வொன்றினை நடாத்தியுள்ள சுவிஸ் நிறுவனம் ஒன்று பின்வரும் தகவல்களை வெளியிட்டுள்ளது.

1. உலக மனித குலத்தின் உழைப்பால் ஆக்கப்பட்டு இன்று தனிப்பட்டவர்களின் உடமைகளாய் உள்ள உலக சொத்தின் மொத்தப் பெறுமதி இருநூற்று ஐம்பது இலட்சம் (250,00000) கோடி டொலர்கள் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. (இங்கு டொலர் என்பது அமெரிக்க டொலர் பெறுமதியையே குறிக்கிறது. இந்த சொத்து கணக்கெடுப்புக்குள் அவரவர் குடியிருக்கும் வீட்டின் பெறுமதி உள்ளடக்கப்படவில்லை.)

2. இச் சொத்துக்களில் 50 சதவீதமானவை அதாவது ஒரு இலட்சத்து இருபத்தி ஐயாயிரம் கோடி டொலர்கள் பெறுமதி வாய்ந்த சொத்துக்களை இவ் உலகில் மேல்மட்டத்திலுள்ள ஒரு சதவீதமானவர்களே தமது சொந்த உடைமைகளாக வைத்திருக்கின்றனர்.

3. அந்த அறிக்கையானது சொத்துடைய வயது வந்தோரின் உலகளவிலான எண்ணிக்கையை சுமார் 500 கோடியெனக் கணக்கிட்டுள்ளது. (இங்கு சனத்தொகை என்பது தனிப்பட்ட சொத்துடைமைக்கு சட்டரீதியான வயது வந்தவர்களை மட்டுமே குறிக்கிறது)

4. இதில் 8 சதவீதமானோர் அதாவது சுமார் 38½ கோடிப்பேர் ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட சொத்துக்களாக ஒரு இலட்சம் டொலர்களுக்கு மேல் பெறுமதி உடைய சொத்துக்களை வைத்திருக்கின்றனர். அதேவேளை இவர்களில் 0.7 சதவீதமானவர்களே அதாவது சுமார் 3.5 கோடிப் பேரே ஒவ்வொருவரும் 10 இலட்சம் டொலர்களுக்கு மேல் பெறுமதி வாய்ந்த சொத்துக்களை தமது தனிப்பட்ட சொத்துக்களாகக் கொண்டுள்ளனர்.

5. மேலே குறிப்பிட்ட வயது வந்தோர் சனத் தொகையில் 0.7 சத வீதமானோரின் அதாவது 3.5 கோடிப் பேரின் மொத்தச் சொத்துக்களினது பெறுமதி உலக மொத்தச் சொத்தில் 44 சத வீதத்துக்கும் அதாவது 110 இலட்சம் கோடி டொலர்களுக்கும் அதிகமாகும்.

6. இதேவேளை உலகிலுள்ள 70 சத வீதமானோர் ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியில் கொண்டுள்ள சொத்தின் பெறுமதி 10 ஆயிரம் டொலர்களுக்கும் குறைவானதே. இந்த 70 சத வீதமானோரின் அதாவது சுமார் 350 கோடி பேர் சேகரித்து வைத்துள்ள மொத்தச் சொத்துக்களினதும் பெறுமதி உலக மொத்த சொத்துக்களில் மூன்று சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது.

7. உல்கின் மேல் மட்டத்திலுள்ள பணம் படைத்தவர்களில் ஒரு சத வீதமானோரின் தனிப்பட்ட சொத்துக்களின் மொத்தப் பெறுமதி சுமார் நூற்றி இருபத்தைந்து லட்சம் (125,00000) கோடி டொலர்களுக்கு மேல் பெறுமதி வாய்ந்தவை.

8. இன்று உலகில் தனிப்பட்டரீதியில் ஒரு லட்சம் டொலருக்கு மேல் தனிப்பட்ட ரீதியில் சொத்து வைத்திருப்போரின் தொகை 38½ கோடிப் பேர். ஆனால் 100 கோடி டொலர்களுக்கு மேற்பட்ட பெறுமதி வாய்ந்த சொத்துக்களை வைத்திருப்போர் சுமார் 2 ஆயிரத்து 500 பேர் மட்டுமே.

9. இந்த 2 ஆயிரத்து 500 மேல்மட்ட பணக்காரர்களிடம் உள்ள மொத்த சொத்துக்களின் பெறுமதி சுமார் 8 இலட்சம் கோடி டொலர்களாகும். இது உலகில் கீழ் மட்டத்திலுள்ள 70 சதவீதமானவர்கள் உழைத்துச் சேர்த்த சொத்துக்கள் அனைத்தினதும் மொத்தப் பெறுமதியையும் விடச் சற்று அதிகமானதாகும்.

10. குறிப்பிட்ட 2ஆயிரத்து 500 உலக பணக்காரர்களுக்குள், மேல் மட்டத்திலுள்ள 85 பெரும் பணக்காரர்களிடம் உள்ள சொத்துக்களின் மொத்தப் பெறுமதியானது உலகின் கீழ் மட்ட நிலையிலுள்ள அரைவாசிப் பேரின் அதாவது 350 கோடி மக்கள் தொகையினரின் குடும்பச் சொத்துக்கள் அனைத்தினதும் மொத்தப் பெறுமதியையும் விட அதிகமாகும்

11. தற்போதைய உலகில் உள்ள மில்லியன் டொலர்கள் பெறுமதிக்கு மேல் சொத்துடைய 350 இலட்சம் பணக்காரர்களில் சுமார் 150 இலட்சம் பேர் அமெரிக்காவில் உள்ளனர். அதாவது அமெரிக்காவிலுள்ள 20 பிரஜைகளுக்கு ஒரு ஆள் அவ்வாறான பணக்காரர். அதே விதமாக, 650 இலட்சம் பிரஜைகளைக் கொண்ட பிரித்தானியாவில் 25 இலட்சம் பேரும், 850 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட ஜேர்மனியில் சுமார் 10 இலட்சம் பேரும் அவ்வாறான பணக்காரர்களாக உள்ளனர்.

12. இந்த நிலைமை வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் மட்டும் தான் என்றில்லை. சீனாவிலும் இந்தியாவிலும் தலா சுமார் 10 இலட்சம் பேர் தமது தனிச் சொத்தாக 10 இலட்சம் டொலர்களுக்கு மேற்பட்ட பெறுமதி வாய்ந்த சொத்துக்களைக் கொண்டுள்ளனர்.

13. 100 கோடி டொலர்களுக்கு மேல் பெறுமதியான சொத்துக்களை தமது குடும்பச் சொத்தாக வைத்திருக்கும் குடும்பங்கள் உலகில் சுமார் 15 ஆயிரம் உள்ளனவென்றும், இதில் 5 ஆயிரம் குடும்பங்கள் அமெரிக்காவிலும் 1000 குடும்பங்கள் சீனாவிலும் 1000 குடும்பங்கள் இந்தியாவிலும் உள்ளனவென்றும் மற்றொரு சர்வதேச அறிக்கை தகவல் வெளியிட்டுள்ளது.

### என்று முடியும் இந்த மனிதகுல அநீதி

தனி ஒருவனுக்கு உணவில்லையென்றாலும் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்று கொதித்தான் பாரதி. ஆனால், நாங்கள் வாழும் இன்றைய ஜகத்தில்,

- போசாக்கின்மை காரணமாக 5 வயதுக்கு உட்பட்ட 35 இலட்சம் குழந்தைகள் வருடாந்தம் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.
- 10 வயதுக்கு உட்பட்ட 660 லட்சம் சிறுவர்கள் இந்த உலகில் பட்டினி வயிற்றோடுதான் பள்ளிக்கூடம் போகிறார்கள். அதில் 250 இலட்சம் குழந்தைகள் கறுப்பர்கள் வாழும் ஆபிரிக்காவைச் சோந்தவர்கள்.
- இந்த 660 இலட்சம் குழந்தைகளின் பட்டினியை நிரந்தரமாக இல்லாமற் போக்குவதற்குத் தேவை வெறுமனே 320 கோடி டாலர்கள்தான். இதேவேளை ஒரு பில் கேற்ஸினுடைய தேறிய தனிப்பட்ட சொத்தின் பெறுமதி 8000 கோடி டாலர்கள்.
- இந்த உலகில் நாள் ஒன்றிற்கு 2 டாலர்களுக்கும் குறைவான வருமானத்தில் வாழுபவர்களின் தொகை 250 கோடி. இதேவேளை, அமெரிக்காவின் மைக்றோசொவ்ற் நிறுவனத்தின் தலைமை முகாமையாளர் சத்யா நடேல்லா பெறும் ஒரு நாள் சம்பளம் சுமார் 2½ இலட்சம் டாலர்கள். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுமா?




> **ஆளும் கன்சவேட்டிவ் கட்சிக்குள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக வேண்டும் என்ற கருத்து பலமாக வேரூன்றியுள்ளது. வெளிநாட்டவர்களின் வருகை குறிப்பாக முன்னாள் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்துள்ளதால் தடையில்லாமல் பிரித்தானியாவிற்கு வருகிறார்கள். இதனால் குறைந்த சம்பளத்திற்கு அவர்கள் வேலை செய்யத் தயாராக உள்ளதால் உள்நாட்டவர்கள் பல இலட்சம் பேர் வேலைகளற்று உள்ளனர். பாடசாலைகளில் இடமில்லை. வைத்தியசாலைகளில் கட்டில் நெருக்கடி, வீடுகள் அதிகம் இல்லாமல் வீட்டு வாடகை அதிகரிப்பு என பிரச்சனைகள் எழுந்துள்ளதால் அந்நியர்களுக்கு எதிரான தாக்குதல்கள் எழுந்துள்ளன**

பிரித்தானிய அரசியலில் இரண்டு பிரதான அம்சங்கள் பத்திரிகைகளை நிறைத்து வருகின்றன. அதாவது தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் பற்றியவை, அடுத்தது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுமா? என்பதாகும்.

தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் இடதுசாரிக் கொள்கைகளில் இறுக்கமான பிடிப்புக் கொண்டவர். குறிப்பாக பிரித்தானியா அந்நிய நாடுகளில் தனது ராணுவத்தை ஈடுபடுத்துவதை மிகக் கடுமையாக எதிர்ப்பதோடு அணு ஆயுதங்கள் தயாரிப்பதையும் அவர் ஆதரிக்கவில்லை. பிரித்தானிய மத்தியதர வர்க்கத்தில் ஒரு சாராரும், தொழிலாள வர்க்கமுமே தொழிற்கட்சியின் பிரதான வேராக உள்ளனர். குறிப்பாக தொழிற்சங்கங்கள் கட்சியின் செலவினங்களுக்கு கணிசமான பணத்தை வழங்கி வருகின்றன.

கடந்த காலங்களில் குறிப்பாக ரொனி பிளேயர் பிரதமராக இருந்தபோது தொழிற்கட்சி அதிகளவு மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்து தொழிற்சங்கங்களை அலட்சியப்படுத்தும் விதத்தில் செயற்பட்டனர். ரொனி பிளேயருக்கு முன்னதாக கன்சவேட்டிவ் கட்சியின் பிரதமராக மாக்கிரட் தச்சர் பிரதமராக இருந்தபோது தொழிற்சங்கங்கள் மீது கடுமையான சட்டங்களை விதித்ததோடு, அவற்றைப் பலவீனப்படுத்த குறிப்பாக சுரங்கத் தொழிலாளர்களைப் பலவீனப்படுத்த நிலக்கரியை இறக்குமதி செய்தார்.

கன்சவேட்டிவ் பிரதமரான மாக்கிரட் தச்சரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த தொழிற்கட்சி தன்னை புதிய தொழிற்கட்சியாக பெயர் மாற்றம் செய்தது. மத்திய தர வர்க்கத்தின் ஆதரவைப் பெறுவதற்காக கன்சவேட்டிவ் கட்சியின் கொள்கைகள் பலவற்றைச் சற்று மாற்று வடிவில் பின்பற்றினார்கள்.

மத்திய தர வர்க்கத்தைத் திருப்திப்படுத்த தொழிற்கட்சியின் புதிய தலைமையும் தனது போக்கை மாற்றியதால் இளைஞர் சமூகம் பெரும் ஏமாற்றமடைந்தது. பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் என்பவற்றில் பல கனவுகளோடு வாழ்ந்துகொண்டிருந்த இளைஞர்களின் எண்ணங்களை இக் கட்சிகள் பிரதிபலிக்கத் தவறின. குறிப்பாக ஈராக் போர், ஆப்கானிஸ்தான் போர், சிரியா, லிபியா போன்ற நாடுகளில் போர், சுற்றுப்புறச் சூழல் மாற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், பல்கலைக்கழக பிரவேசத்திற்குப் பணம் போன்றன பிரித்தானிய இளைஞர் சமுதாயத்தை பெரும் வெறுப்பு நிலைக்குத் தள்ளின.

லிபரல் ஜனநாயகக் கட்சியுடன் கூட்டாட்சி நடத்திய டேவிட் கமரோன் தலைமையிலான கன்சவேட்டிவ் கட்சி அடுத்த பொதுத் தேர்தலில் தனித்து ஆட்சி நடத்தும் நிலை ஏற்பட்டது. ஸ்கொட்லாந்தில் சுமார் 50 உறுப்பினர்களை வைத்திருந்த தொழிற்கட்சி அத்தனை தொகுதிகளையும் ஸ்கொட்லாந்து தேசியக் கட்சியிடம் இழந்தது. தொழிற்கட்சித் தலைமையின் வலதுசாரி நோக்கிய அணுகுமுறையின் தோல்விகள் காரணமாக கட்சிக்குள் இளைஞர்களின் கை ஓங்கியது. தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து பதவியை ராஜினாமா செய்த அதன் தலைவரான எட் மிலிபாண்ட் புதிய தலைவர் தெரிவுக்கு வழி சமைத்தார்.

புதிய தலைவர் தேர்தல் அறிவித்ததும் தொழிற்கட்சியில் பல இளைஞர்கள் இணைந்தனர். தொழிற்சங்கங்களும் இம் மாற்றத்தில் இணைந்துகொண்டன. தொழிற்கட்சி வரலாற்றில் மிகப் பெருந்தொகையான இளைஞர்கள் இணைந்தது இதுவே முதற் தடவையாகும். இடதுசாரிக் கொள்கைகளில் தீவிர பற்றுக் கொண்டிருந்த ஜெரமி கோபன் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டார். இவர் இலங்கைப் பிரச்சினையில் அதிகளவு ஆர்வத்தோடு பங்கெடுத்துக்கொள்பவர். வேறு பலரும் போட்டியிட்ட போதிலும் வெற்றி யாருக்கு என்பது கோபனின் கூட்டங்களில் திரண்டிருந்த இளைஞர் கூட்டம் உறுதி செய்தது.

பத்திரிகைகள் தேர்தல் முறையில் தவறிருப்பதாகப் புலம்பின. தீவிர இடதுசாரி ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக வந்தால் நாட்டின் பாதுகாப்பிற்கு பெரும் ஆபத்து என்றன. தொழிற்கட்சித் தலைமைக்குப் போட்டியிட்ட ஏனையோர் மிகவும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர். இத்தனைக்கும் மத்தியில் ஜெரமி கோபன் பெரும் வெற்றி பெற்று எதிர்க்கட்சித் தலைவரானார்.

அதனைத் தொடர்ந்து அவர் அணியும் ஆடை, மகாராணியாரை சந்திக்கும் வழமைகளைப் புறக்கணித்ததாக புகார் என பத்திரிகைகள் அவதூறுகளைப் பரப்பின. நிழல் மந்திரிசபை அமைப்பதில் பெரும் சங்கடங்கள் ஏற்பட்டன. சிரியா மீது விமானத் தாக்குதல் நடத்த பாராளுமன்ற அனுமதியை பிரதமர் டேவிட் கமரோன் கோரியபோது ஜெரமி கோபன் தனது எதிர்ப்பை வெளியிட்டார். இதனால் நிழல் மந்திரி சபை உறுப்பினர்கள் சிலர் அரசுடன் இணைந்து வாக்களித்தார்கள்.


மொத்தத்தில் முதலாளித்துவ, ஏகாதிபத்திய வலதுசாரி அரசின் எதிர்க்கட்சித் தலைவராக இடதுசாரி ஒருவர் வந்ததும் தொழிற்கட்சிக்குள் காணப்படும் குமுறல்கள் புதிய அரசியல் சிந்தனைக்கான விளை நிலமாக மாறிவருகிறது.


ஆளும் கன்சவேட்டிவ் கட்சிக்குள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக வேண்டும் என்ற கருத்து பலமாக வேரூன்றியுள்ளது. வெளிநாட்டவர்களின் வருகை குறிப்பாக முன்னாள் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்துள்ளதால் தடையில்லாமல் பிரித்தானியாவிற்கு வருகிறார்கள். இதனால் குறைந்த சம்பளத்திற்கு அவர்கள் வேலை செய்யத் தயாராக உள்ளதால் உள்நாட்டவர்கள் பல லட்சம் பேர் வேலைகள் அற்று உள்ளனர். பாடசாலைகளில் இடமில்லை. வைத்தியசாலைகளில் கட்டில் நெருக்கடி, வீடுகள் அதிகம் இல்லாததால் வீட்டு வாடகை அதிகரிப்பு என பிரச்சனைக்ள எழுந்துள்ளதால் அந்நியருக்கு எதிரான தாக்குதல்கள் எழுந்துள்ளன.

இப் பின்னணியில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதா? இல்லையா? என மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்க ஆளும் கன்சவேட்டிவ் கட்சி தயாராகிறது. இதனால் தொழில் அதிபர்களில் ஒருசாராரும், தொழிற்கட்சியும், ஸ்கொட்லாந்து தேசியக் கட்சியும் மற்றும் லிபரல் ஜனநாயகக்கட்சி போன்றனவும் விலகக் கூடாது எனக் கோரிவருகின்றன. பிரித்தானிய ஏற்றுமதி வர்த்தகத்தில் பெரும்பகுதி ஐரோப்பிய ஒன்றியத்துடனேயே உள்ளன. உள்ளூர் வேலை வாய்ப்புகள் இந்த ஏற்றுமதி வர்த்தகத்தில் தங்கியுள்ள நிலையில் பிரித்தானியா விலகுவது பெரும் தற்கொலையாகும் என்று ஐரோப்பாவுடன் இணைந்தே இருக்கவேண்டும் எனக் குரல் தரும் தரப்பினர் கூறுகின்றனர்.


இதனால் வேலைவாய்ப்பை இழந்து, போதிய வருவாய் அற்று கடன் தொல்லையில் சிக்கியுள்ள பல லட்சம் மக்கள் பெரும் குழப்பத்தில் தள்ளப்பட்டுள்ளனர். எதிர்காலமே சூனியமாகிவிடுமோ என எண்ணும் இளம் தலைமுறையினர் கன்சவேட்டிவ் கட்சி தமது எதிர்காலத்துடன் விளையாடுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதா? இல்லையா? என்பது பிரித்தானியாவின் எதிர்காலம் குறித்த பல கேள்விளை எழுப்பியுள்ளது.


ஜெரமி கோபன்


எட் மிலிபான்ட்


டேவிட் கமரோன்


ரொனி பிளேயர்

ஜனவரி மாதம் வெளியான கண்ணோட்டம் பத்திரிகை பக்கவடிவமைப்பு செய்யப்பட்ட போது பயன்படுத்தப்பட்ட ஒரு எழுத்துரு பத்திரிகை அச்சிடப் பட்ட இடத்தில் இல்லாததால் ஆசிரிய தலையங்கத்தின் தலைப்பு மற்றும் முன்பக்கத்திலும் 4ம் பக்கத்திலும் பெரிது படுத்திக் காட்டப்பட்ட (Highlight) வாக்கியங்களை வாசிக்க முடியாமல் போனதால் வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக வருந்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் சமூக அமைப்புக்களின் முக்கியத்துவமும் சிவில் சமூகம் என்ற போர்வைக்குள் கோலோச்சும் அரசியலும்

தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் காணப்படும் பல்வேறு சமூகப் பிரிவினருக்கும் வெவ்வேறு தேவைகளும் பிரச்சினைகளும் உள்ளன. அவர்கள் தமது தேவைகள், பிரச்சினைகள், கோரிக்கைகளை முன்வைத்து அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு குரலெழுப்பி வருவதையும், ஜனநாயக ரீதியில் போராட்டங்களை நடாத்தி வருவதையும் காண்கிறோம். ஒரு சமூகத்தில் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் சமூக அமைப்புக்கள் தனித்தும், கூட்டாகவும் இப் பணியில் ஈடுபடுகின்றன. நம் மத்தியில் உள்ள சிவில் சமூக அமைப்புக்களின் பாத்திரம், அவை எதிர் கொண்ட பிரச்சினைகள் எத்தகையது என்பது பற்றிப் பார்ப்பது இப்பத்தியின் நோக்கமாகும்.

மக்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதன் அடிப்படையில் மக்களை ஒன்றிணைக்கவும், அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், சமூக அக்கறை கொண்ட சிவில் சமூக அங்கத்தவர்களும் சிவில் சமூக அமைப்புக்களும் பங்களிக்க முடியும்.

ஒரு சிவில் சமூக அமைப்பு முன்னெடுக்கின்ற போராட்டத்திற்கு ஆதரவாக இதர சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் வெளிப்படையாக ஆதரவளிப்பது, இணைந்து போராடுவது குறித்த அந்த சிவில் சமூக அமைப்பின் கோரிக்கைகளுக்கு பலம் சேர்க்கவும், பரந்துபட்ட மக்களின் ஆதரவைத் திரட்டவும் வழி வகுக்கின்றது. இதன் மூலம் குறித்த கோரிக்கைக்குத் தீர்வு வழங்க வேண்டியவர்களின் கவனத்தை ஈர்க்க முடிவதுடன் தீர்வு எட்டப்படுவதற்கு உரிய சாதகமான சூழ்நிலையும் உருவாகின்றது.

அரசியற் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், கட்சி பேதங்களுக்கு அப்பால், சிவில் சமூக அமைப்புக்கள் முன்னெடுக்கும் மக்கள் நலனை முன்நிறுத்தும் பொது விடயங்களில் பங்கேற்பது ஆரோக்கியமானதும், சமூகத்துக்கு நன்மை பயப்பதுவுமாகும். இத்தகைய போராட்டங்களில் பங்கேற்கும் அரசியற்கட்சிகள், அரசியல்வாதிகள் தமது சுய விளம்பரத்திற்கும் கட்சி பிரசாரத்திற்கும் குறுக்கு வழியில் இவற்றைப் பயன்படுத்தும் குறுகிய நோக்கத்துடன் செயற்படுவது கைவிடப்பட்டால் போராட்டங்களில் நம்பிக்கையும், போராட்டங்களுக்கான பங்களிப்பும் அதிகமாகும்.

சுகாதாரம், கல்வி, போக்குவரத்து போன்ற மக்களின் அடிப்படை வசதிகள் சீராகக் கிடைக்கவும், மனித உரிமைகள், கருத்துச் சுதந்திரம், நுகர்வோர் பாதுகாப்பு உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் பேணப்படுவதற்கும், அரசாங்க நிர்வாகத்தால் இழைக்கப்படும் அநீதிகள், பாரபட்சங்களுக்கு எதிராகவும் சிவில் சமூக அமைப்புக்கள் காத்திரமான பங்களிப்பினை ஆற்ற முடியும்.

### சிவில் சமூக அமைப்புக்களுக்கு ஆப்பு

1986 இல் ஆயுதந் தாங்கிய ஈழ விடுதலைப் போராட்ட அமைப்புக்களின் தோற்றமும் வளர்ச்சியும் சிவில் சமூக அமைப்புக்களுக்கு அது வரையிருந்த சுதந்திரம், சுயாதீனம், வெளிப்படைத் தன்மை என்பவற்றை தக்க வைத்துக் கொள்ள இயலாத நிலைமைளை உருவாக்கியது.

அரசின் கெடுபிடிகள் காரணமாக சிவில் சமூக அமைப்புக்களும் நபர்களும் ஆயுதந் தாங்கிய இயக்கங்களுடன் தமக்கிருந்த நியாயமான தொடர்புகளை மறைக்க வேண்டி ஏற்பட்டது. அவ்வாறு தொடர்புகளை வைத்திருந்த பலர் இன்னல்களுக்கு உள்ளாகினர். அத்தகைய தொடர்புகளால் சில அமைப்புக்கள் தொடர்ந்து செயற்பட முடியாமற் போயின. எனவே சிவில் சமூக அமைப்புக்கள் தமது கருத்துக்களை, செயற்பாடுகளை உருமறைப்பு செய்ய வேண்டியதாயிற்று. இதன் விளைவாக சமூகத்தில் வெளிப்படைத் தன்மை காணாமல் போனது. இருப்பினும் பொது நன்மையிலிருந்து அவ்வாறான உருமறைப்பு தேவைப்பட்ட, தர்மமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட காலகட்டம் அது.




அரசியல் தெளிவு குறைந்த, முதிர்ச்சி அடையாத, தூரநோக்கற்ற - புதிய அனுபவம் என்பதால் பக்குவமற்றிருந்த - இளைஞர்கள் பல்வேறு குறைபாடுகளுடனும் சமூகத்தில் நிலவிய போட்டி, பொறாமை, சுயநலம், இனக்குரோதம், பிரதேசவாதம், தீண்டாமை, மூடநம்பிக்கை போன்ற தீய அம்சங்களோடும் தான் இச்சமூகத்தின் மத்தியில் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இருப்பினும் இந்த இழி குணங்களை இல்லாதொழிப்பதற்கான போராட்டங்களும் அந்த இயக்கங்களுக்குள்ளேயே நிகழ்ந்து கொண்டிருந்தன. இவற்றில் காணப்பட்ட அளவு ரீதியான வேறுபாடுகள், இயக்கங்களுக்குள் அத்தகைய போராட்டங்களை நடாத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட அளவு என்பன தான் ஆயுதந் தாங்கிய இயக்கங்களை குணாம்ச ரீதியாக வேறுபடுத்தின.

### படுகொலைகளின் தோற்றுவாய்

அரசியல் தெளிவு, தத்துவார்த்த அடிப்படை எதுவுமற்று வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளத் தவறி எங்களுடைய இயக்கம் மட்டுமே சிறந்தது, எங்களுடைய இயக்கத் தலைவர்கள் மட்டுமே புனிதமானவர்கள், எங்களுடைய இயக்கம் மட்டுமே மக்களின் விடுதலைக்காகப் போராடுகிறது என்ற கற்பிதங்கள் தலையெடுத்தன.

இவ்வாறு சக இயக்கங்களை தமக்குப் போட்டியாகக் கருதியவர்கள், சந்தர்ப்பம் வாய்த்தபோது சக இயக்கங்களுக்கு எதிராக வீதிகளை மறிக்கவும், ஊர்வலம் போகவும் மக்களை தூண்டி விட்டார்கள் அல்லது மக்கள் என்ற போர்வையில் தத்தமது இயக்க ஆதரவாளர்களை இதற்காகப் பயன்படுத்தினார்கள். சக இயக்கங்கள் தவறுகளைத் திருத்திக் கொண்டு போராட்டத்திற்குப் பங்களிக்க வேண்டும் போராட்டத்திற்குப் பலம் சேர்க்க வேண்டும் என்ற ஆரோக்கியமான அணுகுமுறைக்குப் பதிலாக சக இயக்கங்களின் நடைமுறைத் தவறுகளைப் பயன்படுத்தி அவர்களை மக்கள் மத்தியில் மதிப்பிழக்கச் செய்தல், போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்துதல் போன்ற குறுகிய நோக்கங்கள் வலுப்பெற்றிருந்தன.

இந்த குறுகிய நோக்கங்களின் வளர்ச்சிப் போக்கு 1986 ஆம் ஆண்டு ஈழவிடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்த சக இயக்கங்களை புலிகள் மக்கள் மத்தியில் சுதந்திரமாக இயங்க விடாமற் தடை விதித்தனர். குறிப்பிட்ட இயக்கங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் பலரையும் படுகொலை செய்தனர். புலிகளின் இந்த ஜனநாயக விரோதப் போக்கு நேச முரண்பாடுகளோடு நட்பு சக்திகளாக விளங்க வேண்டிய சக இயக்கங்களை விரோதிகளாக்கியது. இதன் விளைவாக உருவான மோதல்களில் மாற்றுத் தரப்புக்கு சார்பானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பலர் தாக்குதல்களுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளானதுடன் பல உயிர்கள் பலியாகவும் நேர்ந்தது. புலிகளின் ஜனநாயக விரோதப் போக்கினாலும், அதன் தொடர்ச்சியாலும் விளைந்த அச்சமும், பீதியும் சிவில் சமூக அமைப்புக்கள் முற்றாக முடங்கிப் போகும் நிலையைத் தோற்றுவித்தது.

### நியாயம் கற்பித்த சிவில் சமூகம்

இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஆரம்பத்தில் ஒப்பந்தத்துக்கு ஆதரவாகவும் பின்னர் அதற்கு எதிராகவும் புலிகள் எடுத்த தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்தவும், தமது இரட்டை வேடத்தை மறைப்பதற்காக தமிழ் மக்கள் அந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை என்று காட்டவும், போராட்டங்களை நடாத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்த புலிகளுக்கு சிவில் சமூக அமைப்புக்கள் தேவைப்பட்டன சிவில் சமூகப் பிரமுகர்கள் தேவைப்பட்டார்கள்.

சிவில் சமூக அமைப்புகள் புலிகளின் அரசியலைப் பிரசாரம் செய்கின்ற புலிகளின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு புலிகளை ஏகபிரதிநிதிகளாக அங்கீகரித்து செயற்பட வேண்டியிருந்தது.

இதனால் வடக்கு கிழக்கில் எந்த ஒரு சிவில் சமூக அமைப்பும் எந்த ஒரு பொது மகனும் புலிகளின் ஆயுத நடவடிக்கைகளை ஆதரிக்காது செயற்பட முடியாத நிலை படிப்படியாக ஏற்படுத்தப்பட்டது.

இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக, புலிகளே இத்தகைய சிவில் சமூக அமைப்புக்களை உருவாக்கி, அவற்றுக் கூடாக தமது நிலைப்பாட்டிற்கும், செயற்பாடுகளுக்கும் மக்கள் மத்தியில் ஆதரவு தேடுவதற்கும் தமது தவறான போக்குகளை நியாயப்படுத்தவும் அவற்றைப் பயன்படுத்தினார்கள்.

இவ்வாறு தான் பல பிரஜைகள் குழுக்கள், ஒன்றியங்கள், மாணவர் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. கலை இலக்கிய செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்களும் புலிகளின் நோக்கத்தைத் தட்டிக் கழிக்க முடியவில்லை. புலிகள் துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டவர்கள், புலிகளால் இலக்கு வைக்கப்பட்டு தப்பித்தவர்கள் சகலரையும் உள்ளடக்கி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு புலிகள் பச்சைக் கொடி காட்டியதும் கூட அத்தகைய உள் நோக்கத்தோடுதான் என்பதை அறியாதவர்கள் இல்லை எனலாம்.

புலிகளின் ஜனநாயகத்திற்கு விரோதமான ஏகபிரதிநிதித்துவக் கருத்தியலை படிப்படியாக ஏற்றுக் கொண்டவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்காக புலிகள் மட்டுமே தொடர்ந்து போராடுவதாகக் கூறத் தொடங்கினார்கள். காரண காரிய தொடர்புகளை நிராகரித்து இதர இயக்கங்கள் போராட்டத்தைக் கைவிட்டு விட்டதாக தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்தவும் செய்தனர்.

மறுவளமாக, புலிகளின் தவறான போக்குகளுக்கும், துயர முடிவுக்கும் திரைமறைவில் செயற்பட்ட, ஆலோசனை வழங்கிய சிவில் சமூகப் பிரமுகர்கள், "புலிகளே போரைத் தொடங்குங்கள்" என்று ஊர்வலம் போன சிவில் சமூக ஒன்றியங்களின் முக்கியஸ்தர்கள், முள்ளிவாய்க்காலின் துயர முடிவுகள் வரை போரை நடத்துமாறு புலிகளை உசுப்பேற்றிய ஊடகவியலாளர்கள் எல்லோரும் பின்னர் புலிகள் மீது பழியைப் போட்டு விட்டு நடந்து முடிந்த அழிவுகளுக்கும் இழப்புகளுக்கும் தாங்கள் பொறுப்பல்ல என்பதுபோல தப்பிக் கொண்டார்கள்.

### சிவில் சமூகப் போர்வையில் பொறுப்பற்ற அரசியல்

புலிகள் போராட்டத்திற்கு அறிமுகம் செய்த கோட்பாடுகளும், வழிமுறைகளும் தோல்வியைத் தளுவியதை நாம் வாழும் காலத்திலேயே கண்டு கொண்டோம். புலிகளின் போக்கு புலிகளை அழிவுக்குள்ளாக்கியதோடு அவர்களை நம்பியிருந்த மக்களைப் பெரும் துன்பத்திற்கும், பேரிடர்களுக்கும் உள்ளாக்கியிருப்பதையும் காண்கிறோம்.

இருப்பினும், புலிகள் எங்கள் சமூகத்திற்குப் பயிற்றுவித்த தந்திரங்களும், குறுக்கு வழிகளும் தொடர்ந்தும் கோலோச்சுகின்றன. அவற்றில் ஒன்றுதான் சிவில் சமூகம், சிவில் சமூக அமைப்புக்கள், சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஒழிந்து நின்று கொண்டு அரசியல் நடாத்தும் போலித்தனம் இப்போது தலையெடுத்திருப்தைப் பார்க்கிறோம்.

ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளித்து சமூகத்தின் பல்வேறு தரப்பினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்காமலே புலிகளின் பாணியில் சிவில் சமூகத்தின் பெயரை அவரவர் தத்தமது அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். கானலை நீர் என்றெண்ணி அலையும் மான்களைப் போல இங்கு மக்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேர்தற் காலங்களில் ஒற்றுமையாகக் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு பகிரங்கமாக மக்களைக் கோரிய சிவில் சமூக அமைப்புக்கள், பிரமுகர்கள் அதே கூட்டமைப்பின் அதிகாரத்தின் கீழ் உள்ள மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளில் இடம் பெறுகின்ற ஊழல்கள் குறித்தோ, மாகாண சபையின் பொருத்தமற்ற தீர்மானங்கள் குறித்தோ, உள்ளூராட்சி சபைகளுக்கும் மாகாண சபைகளுக்கும் அரசினால் மக்களுக்காக ஒதுக்கி வழங்கப்பட்ட நிதி மத்திய அரசுக்குத் திரும்பிச் செல்வது பற்றியோ இந்த சிவில் சமூகங்கள் எதுவும் கூறாது மௌனம் சாதிப்பதன் பின்னணி என்ன என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு சிவில் சமூக அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் நம்மூர் பிரமுகர்கள் தீவிர அரசியலை மக்கள் மீது திணிக்கிறார்கள் ஆனால், அதன் விளைவாக சமூகம் எதிர் கொள்ள நேர்கின்ற எந்தப் பிரச்சினைக்கும் பொறுப்புக் கூறுவதிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். சிவில் சமூகம் என்ற போர்வை தமது அரசியலை மறைத்துக் கொள்ள, பொறுப்புக் கூறுவதிலிருந்து தப்பிக்கொள்ள அவர்களுக்கு மிக வசதியாக இருக்கிறது.

### உண்மையான சிவில் சமூக அமைப்புக்களின் தேவையும், பணிகளும்

போக்குவரத்துச் சேவைகளில் அல்லற்படும் அவமானப்படுத்தப்படும் பயணிகள் குறித்தோ, வைத்தியசாலைகளில் தகுந்த சிகிச்சை கிடைக்காமல் அலைக்களிக்கப்படும் நோயாளர்கள் குறித்தோ, அரசாங்க அலுவலகங்களில் தமது தேவைகளுக்காகக் கூனிக்குறுகி நிற்கும் சாதாரண மக்கள் பற்றியோ, வர்த்தக நிலையங்களில் ஏமாற்றப்படுகின்ற நுகர்வோர் குறித்தோ, கல்வியில் மாணவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் குறித்தோ, ஊழல்கள் மலிந்த நிர்வாகங்கள் பற்றியோ, அதிகார துஷ்பிரயோகங்கள் பற்றியோ, கடமை செய்யத் தவறுகின்ற, கடமையைத் தட்டிக்களிக்கின்ற அதிகாரிகள், ஊழியர்கள் பற்றியோ, மீனவர்களின் வாழ்விடங்களின் நிலமை தொடர்பாகவோ தொழிலாளர்கள், விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பாகவோ எம்மிடையே உள்ள சிவில் சமூக அமைப்புக்கள் ஆக்கபூர்வமாக செயற்பட்டதுமில்லை, அக்கறை காட்டுவதுமில்லை. தனித்தோ, ஒருமித்தோ இத்தகைய பிரச்சினைகளுக்காக குரல்கொடுக்கின்ற உண்மையான சிவில் சமூக அமைப்புக்களே இன்று மக்களின் தேவை. தமிழ் சமூகம் கற்றுக்கொண்ட பாடங்களிலிருந்து புத்திபூர்வமாகச் செயற்படுமா? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகள் உருவாக்கிய பூதங்களே

# உலக பயங்கரவாத அமைப்புகள்

**உலகில் தமக்கு வசதியாக இருந்தால் மன்னராட்சிகளைப் பாதுகாப்பது சர்வாதிகார அரசுகளை நிறுவி பராமரிப்பது, தமக்கு வசதியாக அந்த நாடுகள் இல்லையென்றால் மட்டும் ஜனநாயகம் மனித உரிமைகள் என்ற பெயரில் அந்த நாடுகளுக்குள் புகுந்து சீரழிப்பது என்பதை வல்லமையுள்ள நாடுகள் நிறுத்த வேண்டும்.**

**கோபாலகிருஷ்ணசாமி**

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இன்னொரு தடவை உலகம் தழுவிய யுத்தத்தை இந்தப் பூமி தாங்காது என்பதை வளர்ச்சியடைந்த முதலாளிதத்துவ நாடுகள் புரிந்துகொண்டன. யுத்தங்கள் கூடாது என்பதற்காக அல்ல. மாறாக சர்வதேச அளவிலான யுத்தங்கள் முதலாளித்துவத்தின் இருப்பையே கேள்விக் குறியாக்கியபடியாலேயே அவை அந்த முடிவுக்கு வந்தன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் தாங்கள் நேரடியாக ஏனைய நாடுகளோடு யுத்தங்கள் நடத்துவதை நிறுத்திக் கொண்டாலும் யுத்தங்கள் இந்த உலகத்தில் நிகழ்வதை அவர்கள் நிறுத்தவில்லை. மாறாக அனைத்து யுத்தங்களையும் அவர்களே மறைந்து நின்றே நடத்துகின்றனர்.

### உலகமகா யுத்தங்கள் கொண்டுவந்த மாற்றங்கள்

முதலாவது உலக மகா யுத்தம் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே என மட்டுப் படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் யுத்தத்தில் ஈடுபட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு ஆயுதங்களையும் ஆயுத தளபாடங்களையும் விற்பனை செய்து பெற்ற வருமானத்தாலேயே அமெரிக்கா உலக பொருளாதார வல்லரசானது. அதன் மறுபக்கம் ரஷ்யாவில் சோசலிசப் புரட்சி வெற்றிகரமாக நடந்து சோவியத் யூனியன் உருவாகுவதற்கும் முதலாவது உலகயுத்தமே வாய்ப்பாக அமைந்தது.

முதலாவது உலகமகா யுத்தம் முடிவடைந்து பலவீனமான நிலையில் இருந்த ஐரோப்பிய வல்லரசுகள் தாம் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் கொண்டிருந்த காலனி ஆட்சிகளை தொடர்ந்தும் வைத்திருக்க முடியாதவாறு சங்கடங்களை எதிர்நோக்கின. 1939ல் இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பித்து ஒரு பக்கம் ஜேர்மனி ஐரோப்பா முழுவதையும் ஆளுவதற்கும் மறுபக்கம் யப்பான் ஆசியா முழுவதையும் ஆளுவதற்குமான முயற்சியில் யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்த ஆரம்ப ஆண்டுகளின் போதும் அமெரிக்காவே யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகளுக்குப் பெருமளவில் ஆயுதங்களையும் ஆயுத தளபாடங்களையம் விற்பனை செய்தது. அதன்மூலம் தனது செல்வங்களைக் குவித்துக் கொண்டிருந்தது.

அதேவேளை உலக யுத்தம் ஏற்படுத்திய சூழல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சீனப் புரட்சியைப் பெற்றெடுப்பதற்கு வாய்ப்புகளைக் கொடுத்தது. மேலும், இந்தியா மற்றும் பல ஆசிய ஆபிரிக்க நாடுகளிலிருந்து படிப்படியாக ஐரோப்பிய வல்லரசுகள் தமது காலனி ஆட்சிகளை மூடிக்கட்டிவிட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது.


முதலாவது உலக மகா யுத்தத்தோடு நிலைபெற்ற சோவியத் யூனியன் இரண்டாம் உலக மகாயுத்த முடிவுக்கட்டத்தில் அமெரிக்காவுக்குச் சமமான வல்லரசாகத் தலை நிமிர்ந்தது. ஐரோப்பாவின் அரைவாசி நாடுகள் கம்யூனிஸ்ட் ஆட்சிகளின் கீழ் வந்துவிட்டன. உலக யுத்தம் அடுத்தடுத்து தொடர்ந்தால் பூமியில் உயிரினங்கள் முற்றாக அழிந்து விடுமோ இல்லையோ முதலாளித்துவம் முற்றாக அழிந்துவிடும் என்ற நிலைமையே காணப்பட்டது. இதுவரை உலக மக்களைச் சுரண்டி உலக வளங்களைக் கொள்ளையடித்து கொழுத்து வளர்ந்த ஐரோப்பிய மற்றும் அமெரிக்க வல்லரசுகள் இரண்டாம் உலகமகா யுத்தத்தின் முடிவோடு புதிய வகையில் புதிய வடிவங்களில் தமது சர்வதேச அரசியல் பொருளாதார மற்றும் இராணுவக் கொள்கைகளையும் மூலோபாயங்களையும் மாற்றியமைக்க வேண்டியவையாகின.

### முதலாளித்துவக் கூட்டாளிகளின் தந்திரங்களால் வந்த வினை

இவ்வாறாக உலக அளவிலான யுத்தங்களுக்கு வாய்ப்புகள் இல்லாது போன போதும் உலகம் தொடர்ந்தும் அரசியல் பொருளாதார போராட்டங்களாலும் அவற்றுக்கெதிரான அரச ஒடுக்குமுறைகள் மற்றும் அரச பயங்கரவாதங்களாலும் நிறைந்தபடியேதான் இயங்கிக் கொண்டிருந்தது. றும் பிரதேச வாதங்களை வளர்க்கும் வகையாக இனவாதங்களைத் தூண்டி வளர்த்து விடுவதிலும் அமெரிக்க மற்றும் அதன் முதலாளித்துவ கூட்டாளிகள் தமது எல்லாத் தந்திரங்களையும் பிரயோகித்தமை தெரிந்ததே.

எனினும், 1980களின் நடுப்பகுதி வரை உலகில் மதவாத பயங்கரவாதம் தலை தூக்கவில்லை. ஆப்கானிஸ்தானில் நஜிபுல்லா தலைமையில் நடைபெற்ற சோசலிச முன்னேற்றத்துக்கான முயற்சிகளைத் தோற்கடிப்பதற்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய முதலாளித்துவக் கூட்டாளிகள் எப்போது மத வெறி கொண்ட தாலிபான்களின் வளர்ச்சிக்கும் வல்லமைக்கும் துணை கொடுக்கத் தொடங்கினார்களோ அப்போது தான் உலகில் மதவாத பயங்கரவாதிகளின் செல்வாக்கு கால்பதிக்கத் தொடங்கியது.

> 1980 களின் நடுப்பகுதி வரை உலகில் மதவாத பயங்கரவாதம் தலை தூக்கவில்லை. ஆப்கானிஸ்தானில் நஜிபுல்லா தலைமையில் நடைபெற்ற சோசலிச முன்னேற்றத்துக்கான முயற்சிகளைத் தோற்கடிப்பதற்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய முதலாளித்துவக் கூட்டாளிகள் எப்போது மதவெறி கொண்ட தாலிபான்களின் வளர்ச்சிக்கும் வல்லமைக்கும் துணை கொடுக்கத் தொடங்கினார்களோ அப்போது தான் உலகில் மதவாத பயங்கரவாதிகளின் செல்வாக்கு கால்பதிக்கத் தொடங்கியது.



நஜிபுல்லா, ஷா, கொமெய்னி, சதாம், கடாபி

எனினும், ஏறத்தாழ 1980 களின் நடுப்பகுதி வரை இந்த உலகில் மதவாத பயங்கரவாதம் குறிப்பிடத்தக்க வகையாக இருக்கவில்லை. இன்றைய உலகில் கொடூரமாகத் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிற மதவாத பயங்கரவாதத்தை விதைத்து நீரூற்றி வளர்த்து விட்டவர்கள் வேறு யாருமல்ல. இன்று அதைப் பற்றி அதிக மாகக் கூக்குரல் எழுப்புகிற அமெரிக்காவும் மற்றும் அதன் ஐரோப்பிய முதலாளித்துவக் கூட்டாளி நாடுகளுமே.

இரண்டாம் உலக மகா யுத்தம் முடிந்த பின்னர் படிப்படியாக ஒவ்வொன்றாக விடுதலையடைந்த நாடுகளின் அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மைகளை சீர்குலைப்பதற்காக அந்த நாடுகளின் ஆட்சியில் இருப்பவர்கள் மத்தியில் அரசபயங்கரவாத பயன்பாட்டைத் தூண்டி விடுவதிலும், அதே வேளை அரசுக்கு எதிரான போராட்ட இயக்கங்கள் மத்தியில் பிரிவினைவாதம் மற்

தாலிபான்களின் வளர்ச்சிக்கும் வல்லமைக்கும் துணை கொடுக்கத் தொடங்கினார்களோ அப்போது தான் உலகில் மதவாத பயங்கரவாதிகளின் செல்வாக்கு கால்பதிக்கத் தொடங்கியது.

அமெரிக்க-ஐரோப்பிய முதலாளித்துவ கூட்டாளிகளே உலகைச் சுரண்டுவதற்கும் மறைமுகமாகப் பிரித்தாளுவதற்கும் வசதியாக இருந்தபோது பணம், ஆயுதங்கள், ஐரோப்பாவில் அகதி அந்தஸ்த்து என போஷாக்குகளை ஊட்டி மதவாத பயங்கரவாதத்தை வளர்த்தார்கள். அது இப்போது தம்மையே தாக்குகிறது என்ற போதுதான் கத்திக் குழறுகிறார்கள்

மத்திய கிழக்கில் இஸ்லாமிய நாடுகள் என்று இன்று அழைக்கப்படுகிற நாடுகள் எதுவும் முன்னர் இஸ்லாமிய மதவாத நாடுகளாக இருக்கவில்லை. ஈராக்கிலும் லிபியாவிலும் இராணுவப் புரட்சிகளை நடத்தி முடியாட்சிகளை முடிவுக்குக் கொண்டு வந்து தமது இராணுவ சர்வாதிகாரங்களை நிலைநாட்டிய சதாம் ஹூசைனும், முகம்மத் கடாபியும் இஞ்சியளவு கூட மதவாதிகளாக இருக்கவில்லை. அவர்கள் பகிரங்கத்தில் அல்லாவை அழைத்து ஓதுகின்ற நிலமையை உருவாக்கியவர்கள் இந்த அமெரிக்க ஐரோப்பிய முதலாளித்துவக் கூட்டாளிகளே!

### மத்திய கிழக்கில் நிரந்தர அமைதியின்மைக்கு சூழ்ச்சி

யூதர்கள் மதவாத இனவாதிகளே. வரலாற்றுக் காரணங்களால் உலகம் முழுவதுவும் பரவிப்போன அவர்கள் மீண்டும் இஸ்ரேலுக்கு தாங்களாக வந்து குடியேறியபோது பாலஸ்தீனர்கள் அவர்களை அந்நியர்களாகப் பார்க்கவில்லை. ஹிட்லரின் கொடூரங்களால் உலக அனுதாபம் பெற்றிருந்த யூதர்களுக்குப் புது வாழ்வளிக்கும் போர்வையில் எப்பொழுது அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் பெற்றோலிய எண்ணெய்வளம் கொண்ட மத்திய கிழக்கில் நிரந்தர அமைதியின்மைக்கு வழிவகுக்கும் விதமாக திட்டமிட்ட ரீதியில் இஸ்ரேலை உருவாக்கி பாலஸ்தீனர்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் எப்போது பகைமைச் சண்டையை மூட்டிவிட்டார்களோ அப்போது தான் மத்திய கிழக்கில் இஸ்லாமியர்கள் என்னும் அடிப்படையில் தேச எல்லைகளைக் கடந்த ஒரு சமூக ஒற்றுமை அலை வீசத்தொடங்கியது.

அமெரிக்காவின் எடுபிடியாக இருந்த ஷா மன்னனின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்குத் தலைமை தாங்கிய அயதொல்லா கொமெய்னி அவர்கள் ஒரு மதத் தலைவர்தான் அவர் தலைமையில் ஈரானில் நடந்தது ஒரு ஜனநாயகப் புரட்சியே. ஆனால், அமெரிக்க ஐரோப்பிய கூட்டாளிகள் சதாம் ஹூசைனுக்கு நவீன ஆயுதங்களையும் ஆயுத தளபாடங்களையும் அள்ளிக் கொடுத்து ஈரானுக்கு எதிராக எட்டாண்டுகளுக்கு மேலாக நீடித்த ஒரு யுத்தம் நடப்பதற்குத் துணைபுரிந்தார்கள். அதன் விளைவு தான் ஈரான் தன்னை ஒரு கடுமையான இஸ்லாமியக் குடியரசாக ஆக்கிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளியது.

### தலிபான்கள், அல்-கைதாக்களை போஷித்து வளர்த்தவர்கள்

ஜின்னா அவர்கள் பாகிஸ்தானை ஒரு மதசார்பற்ற நாடாக வளர்க்கவே கனவு கண்டார். ஆனால், இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானைப் பயன்படுத்திய அமெரிக்கக் கூட்டாளிகள் அது ஒரு இஸ்லாமியக் குடியரசு நாடாக ஆகுவதற்கு வழி வகுத்தார்கள். கடைசியாக மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்காவின் கூட்டாளி மன்னர்களின் நாடுகளில் மறைமுகமாக வாழும் கள்ளக் கடத்தல் தாதாக்கள், தாலிபான்களை இந்தியாவுக்குள் ஊடுருவ வைத்து மதவாத பயங்கரவாதத்தைத் தலைவிரித்தாட வைத்தார்கள். சீக்கிய மதவெறியர்கள் இந்தியாவிலிருந்து பஞ்சாபை காலிஸ்தான் எனப் பிரிப்பதற்காக நடத்திய பயங்கரவாதத்துக்குப் பின்னாலும் இந்த உலக முதலாளித்துவக் கூட்டாளிகளே செயற்பட்டார்கள்.

அமெரிக்காவும் அதனது கூட்டாளி ஐரோப்பிய நாடுகளும் 1990 களில் ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் நடத்திய கொடூரங்களாலேயே தாலிபான்களும் அல்-கைதாக்களும் உலக அளவில் வளர்ந்து பரவினார்கள்.

உலகின் பல்வேறு நாடுகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மேற்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் அமீன்
(சோமு ஜெகநாதன்) மட்டுவில்

தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும்
ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

## தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்

தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து பெப்ரவரி மாதத்தில் உயிர் நீத்த தோழர்கள் இவர்கள்.
அவர்களின் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை
முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு இத் தோழர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம்

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் | காரணம் |
|---|---|---|---|---|
| இ.பாக்கியராசா | பாப்பா | 28.02.1987 | ஏறாவூர் | |
| க.திருநாவுக்கரசு | அல்பேட் | 28.02.1987 | காரைதீவு 03 | |
| எஸ்.புத்திசிகாமணி | முரளி | 03.02.1985 | ஏறாவூர் | எஸ்ரிஎவ் |
| எம்.சிறீதரன் | சிறி | 03.02.1985 | வந்தாறுமூலை | எஸ்ரிஎவ் |
| எல்.அருள்தாஸ் | அருள் | 03.02.1985 | ஆறுமுகத்தான்குடியிருப்பு | எஸ்ரிஎவ் |
| எஸ்.அரசரட்ணம் | உதயன் | 03.02.1985 | ஆறுமுககுடியிருப்பு | எஸ்ரிஎவ் |
| | ரவி | 20.02.1986 | மண்டூர் | எஸ்ரிஎவ் |
| | ராஜன் | 02.02.1986 | மண்டூர் | எஸ்ரிஎவ் |
| கே.யோகராஜான் | ராஜா | 28.02.1986 | ஏறாவூர் - 04 | எஸ்ரிஎவ் |
| கே.மகேசன் | சண் | 28.02.1986 | கிரான் | எஸ்ரிஎவ் |
| பி.யோகேந்திரன் | யோகா | 12.02.1986 | பேத்தாளை | எஸ்ரிஎவ் |
| வை.தெய்வசீலன் | செழியன் | 28.02.1986 | களுவாஞ்சிக்குடி | புலிகள் |
| கே.சகாயநாதன் | | 12.02.1986 | ஏறாவூர் | எஸ்ரிஎவ் |
| என்.நாகேஸ்வரன் | யோகா | 26.02.1986 | வாழைச்சேனை | எஸ்ரிஎவ் |
| | இந்திரன் | 16.02.1987 | சேனைக்குடியிருப்பு | புலிகள் |
| | ரஜனி | 04.02.1987 | மண்டூர் | புலிகள் |
| | குட்டி | 00.02.1987 | உன்னிச்சை | புலிகள் |
| என்.குமார் | கண்ணன் | 18.02.1987 | கிரான் | புலிகள் |
| எம்.குணரட்ணம் | ரெட்டு | 12.02.1987 | புதுக்குடியிருப்பு | புலிகள் |
| என்.ஆனந்தன் | சாந்தன் | 03.02.1987 | தம்பிலுவில் | புலிகள் |
| | ரவி | 20.02.1986 | மண்டூர் | எஸ்ரிஎவ் |
| | பாலா | 12.02.1989 | சித்தாண்டி | |
| நித்தி | | 12.02.1989 | அக்கரைப்பற்று | |
| நவீனன் | | 12.02.1989 | மட்டக்களப்பு | |
| நல்லதம்பி | மணி | 13.02.1986 | வாழைச்சேனை | எஸ்ரிஎவ் |
| தாஸ் | | 12.02.1989 | திருகோணமலை | |
| கமலநாதன் | ரமேஸ் | 08.02.1988 | மூதூர் | புலிகள் |
| இந்திரன் | குமார் | 12.02.1989 | வவுனியா | |
| சோமு ஜெகநாதன் | அமீன் | 20.02.1986 | மட்டுவில் | புலிகள் |
| ம. மரியசீலன் | சதீஸ் | 28.02.1989 | இத்தாவில் | புலிகள் |
| சி. ரவிச்சந்திரன் | ரவி | 25.02.1989 | சங்கானை | புலிகள் |
| | குமார் | 22.02.1989 | கம்பர்மலை | புலிகள் |
| மா. நேசராசா | சுரேஸ் | 10.02.1988 | | புலிகள் |

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் | காரணம் |
|---|---|---|---|---|
| | வசந்தன் | 07.02.1990 | கெருடாவில் | புலிகள் |
| | றெஜி | 03.02.1990 | | புலிகள் |
| க. பாலசுப்ரமணியம் | மணியம் | 23.02.1990 | பலாலி | புலிகள் |
| சி. தமிழ்செல்வன் | ரவி | 16.02.1991 | சுன்னாகம் | புலிகள் |
| செ. தங்கத்துரை | | 20.02.1990 | சுன்னாகம் | புலிகள் |
| வ. ஞானசீலன் | | 25.02.1990 | நவாலி | |
| வ.மனோகரன் | | 00.02.1990 | சாவற்கட்டு | புலிகள் |
| வ. ஆனந்தசேகரம் | | 00.02.1990 | மயிலிட்டி | புலிகள் |
| த. நாகேஸ்வரன் | | 00.02.1990 | மயிலிட்டி | புலிகள் |
| க. குணரட்ணம் | | 00.02.1990 | மயிலிட்டி | புலிகள் |
| க. இராசரத்தினம் | | 00.02.1990 | மயிலிட்டி | புலிகள் |
| அ. ஸ்ரீபாலபிரேம்நாத் | பிறேம் | 25.02.1989 | மயிலிட்டி | புலிகள் |
| பா. நாகமுத்து | | 12.02.1990 | மல்லாகம் | புலிகள் |
| அ. பன்னீர்செல்வம் | | 00.02.1990 | பலாலி | புலிகள் |
| கற்கண்டு | | 00.02.1990 | பலாலி | புலிகள் |
| கு. சுதாகரன் | | 00.02.1990 | பலாலி | புலிகள் |
| கொஞ்சும்கிளி | | 00.02.1990 | பலாலி | புலிகள் |
| பொன்னப்பா எட்வேட் | | 00.02.1990 | பலாலி | புலிகள் |
| பயஸ் அலோசியஸ் | | 10.02.1990 | குருநகர் | புலிகள் |
| சி.சிவசிறி | | 12.02.1990 | யாழ்ப்பாணம் | புலிகள் |
| பொ. பூமிநான் | | 12.02.1990 | சாவகச்சேரி | புலிகள் |
| கா. ஜெயரத்ன | | 08.02.1990 | குருநகர் | புலிகள் |
| அ. உதயகுமார் | | 00.02.1990 | குருநகர் | புலிகள் |
| பொ. சிறிதரன் | குட்டி | 28.02.1990 | ஏழாலை | புலிகள் |
| சி. சுதாகரன் | கோபி | 00.02.1990 | சாவகச்சேரி. | புலிகள் |
| மா. செல்வநாயகம் | நசீர் | 00.02.1990 | இணுவில் | புலிகள் |
| நாகமணி மதிர்சன் | | 26.02.1990 | சாவகச்சேரி | புலிகள் |

**தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று பெப்ரவரி மாதத்தில் உயிர் நீத்தவர்களில் எம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம். இங்கு நினைவு கூரப்பட்டுள்ள தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்துவதற்கும் இங்கு பிரசுரிக்கத் தவறிய தோழர்கள் பற்றிய தகவல்கள் அவர்களது புகைப்படங்கள் என்பவற்றை எமக்குக் கிடைக்கச் செய்யுமாறு தோழர்கள். அன்பர்கள். நண்பர்கள். குடும்பத்தவர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.**

## வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடு ...

6 ம் பக்கத் தொடர்ச்சி



ஆசாத்

நடவடிக்கைகளையும் ஏற்பாடுகளையும் மனித உரிமைகளின் பெயரால் கிண்டலடித்துக்கொண்டிருந்த அமெரிக்கா தனது இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டவுடன் பயங்கரவாதத்துக்கெதிரான தலைவனாக தன்னை ஆக்கிக் கொண்டது. தனக்கு வந்தால்தான் தெரியும் தலையிடியும் காய்ச்சலும் என்பது அமெரிக்காவுக்கும் பொருந்தும்.

### வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தது

இப்பொழுது ஐ.எஸ்.ஐ.எஸ் பற்றி உலகம் முழுக்க பீதி கிளப்பப்படுகிறது. இந்த விடயத்தில் உலகம் முழுவதும் உள்ள ஜனநாயக சக்திகள் அக்கறை கொள்வதில் தவறில்லை. ஆனால், இதைத் தோற்றுவித்தவர்கள், இது தோன்றுவதற்குக் காரணமானவர்கள் இப்போதாவது இதனை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உண்மையாகவும் நேர்மையாகவும் சரியாகவும் செயற்படுவார்களா? மற்றவர்களுடன் ஒத்துழைப்பார்களா? என்பதே கேள்விகள்.

ஈராக்கில் சதாம் ஹூசைனின் ஆட்சியை அழித்தொழிப்பதற்காக ஈராக்கின் தென்பகுதியில் இருந்த ஷியா முஸ்லிம்களையும் வடக்கேயிருந்த குர்திஷ் மக்களின் இயக்கங்களையும் அமெரிக்கர்கள் பாவித்தார்கள். அதனால் பல்லாயிரம் குர்திஷ் மக்கள் அழிக்கப்பட்டார்கள். பின்னர் சதாமின் ஆட்சியை அழித்தொழித்ததோடு அமெரிக்கர்கள் குர்திஸ் மக்களைக் கைவிட்டார்கள். சதாம் ஹூசைனையும் அவரது சகாக்கள் அனைவரையும் கொன்றொழித்தது மட்டுமல்லாது அதன் பின்னரும் சுன்னி முஸ்லிம் மக்களிடையே இருந்து யாரும் தலையெடுத்து விடக்கூடாது என்பதற்காக ஈராக்கின் சிறுபான்மையினரான ஷியா முஸ்லிம்களிடம் ஈராக்கின் ஆட்சியை ஒப்படைத்தார்கள். இந்தப் பின்னணியில் தான் ஐ.எஸ்.ஐ.எஸ் தோற்றம் பெற்றது.

ஈராக்கில் சதாம் ஹூசைனையும் லிபியாவில் முகம்மத் கடாபியையும் ஒழித்துக்கட்டிய அமெரிக்கா மத்திய கிழக்கில் அடுத்த பெரிய எண்ணை வள நாடான சிரியாவில் ஆசாத்தின் ஆட்சியை ஒழித்துக் கட்டக் கங்கணம் கட்டியது. அதற்காக ஐ.எஸ்.ஐ.எஸ் காரர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்தது. தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஆசாத் ஆட்சி கடும் நடவடிக்கைகளை எடுத்தபோது சிரிய ஆட்சி மனிதகுல விரோத இராயனக் குண்டுகளைப் பாவிக்கிறது எனக் குற்றம் சாட்டிய அமெரிக்கா ஈராக்கில் புகுந்த அதே ஸ்டைலில் சிரியாவுக்குள் தலையைப் போடுகிற வேலைகளைச் செய்தது. ஆனால், ஆசாத்தின் ராஜதந்திரமும் அதற்கான ரஷ்யாவின் உறுதியான ஆதரவும் அமெரிக்காவுக்குச் சாதகமாக இருக்வில்லை. அது மட்டுமல்லாது ஐ.எஸ்.ஐ.எஸ் காரர்கள் தமது பயங்கரவாதங்களை அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் எதிராகக் கட்டவிழ்த்து விட்டார்கள். அதன் விளைவாகவே தான் அண்மையில் பாரிஸில் பல இடங்களில் ஒரே நேரத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்தன, நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இப்பொழுது இலட்சக்கணக்கான சிரிய மக்கள் அகதிகளாக ஐரோப்பாவை நோக்கி நகருகின்றமை சர்வதேச விவகாரமாக ஆகியுள்ளது, சிரியா முழுவதுவும் நாளாந்தம் குண்டு மழை பொழியப்படுவதால் ஏற்படும் எண்ணற்ற சாவுகளால் சாக்காடாகிக் கொண்டிருக்கின்றது. அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் செய்வதறியாது திகைத்துப் போயிருக்கின்றன.

### ஜனநாயகம், மனித உரிமைகளின் பெயரால் அழிச்சாட்டியம்

உலகில் தமக்கு வசதியாக இருந்தால் மன்னராட்சிகளைப் பாதுகாப்பது சர்வாதிகார அரசுகளை நிறுவி பராமரிப்பது, தமக்கு வசதியாக அந்த நாடுகள் இல்லையென்றால் மட்டும் ஜனநாயகம் மனித உரிமைகள் என்ற பெயரில் அந்த நாடுகளுக்குள் புகுந்து சீரழிப்பது என்பதை வல்லமையுள்ள நாடுகள் நிறுத்த வேண்டும்.

தங்களுடைய நாடுகளின் வளங்களையும் வசதிகளையும் மூடிக்கட்டிப் பாதுகாத்து வைத்துக்கொண்டு மற்ற நாடுகளின் மலை வளங்களையும் நீர் வளங்களையும் கடல் வளங்களையும், கனிம வளங்களையும் சுரண்டுவதற்காக அந்த நாடுகளைத் திறந்து விட வேண்டும் என்று நெருக்கடிகளைக் கொடுப்பதை வல்லமை மிக்க நாடுகள் கைவிட வேண்டும்.

இனியாயினும் இந்த உலகத்தை யுத்தங்கள், பயங்கரவாதங்கள் விமானக் குண்டுத் தாக்குதல்கள், அகதி வாழ்க்கைகள், பட்டினிச் சாவுகள் என்பன இல்லாத ஒன்றாக ஆக்க வேண்டும் என்பதில் உண்மையாகவும் நேர்மையாகவும் வல்லமை மிக்க நாடுகள் செயற்பட வேண்டும்.

நாடுகள் எல்லைகளால் பிரிக்கப்பட்டிருந்தாலும். இந்த உலகின் அனைத்துப் பகுதிகளும் அனைத்து வளங்களும் அனைவருக்கும் பொதுவானது, அனைவருக்கும் சொந்தமானது என்பதை வல்லமை மிக்க நாடுகள் நிலை நாட்டினால் மட்டுமே யுத்தங்களும் பயங்கரவாதங்களும் முடிவுக்கு வரும். தத்தமது வசதிக்காக உருவாக்கப்படும் பயங்கரவாதம் தமது தலைக்கே ஆபத்தாகும் என்பது உணரப்பட வேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரொனால்ட் ட்ரம்ஸ்



பெனி சண்டர்ஸ்



நோம் சோம்ஸ்கி

# அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியின் பாதை உலகப் போரா? சமாதானமா?

சிறீதரா

அமெரிக்காவில் அடிக்கடி பள்ளிக் கூடங்களில் துப்பாக்கிச் சூடுகள் நடந்த வண்ணம் உள்ளன. துப்பாக்கிக் கலாச்சாரத்தின் அனர்த்தங்கள் தொடர் கதையாக மாறி உள்ளது.

கறுப்பு இனத்தவர்கள் எதிர் நோக்கும் சமூக பொருளாதாரப் பிரச்சனைகள் வெள்ளை இனவாதம் இன்னமும் பரவி நிற்பதையே காட்டுகின்றது

கோடீஸ்வரத் தெருவான. வால் ஸ்ரீட் இன் மேல் மக்களுக்கு இருக்கும் கோபம் இன்னமும் தணியவில்லை.

2000 செப்டெம்பர் 11 இற்குப் பின்னர் அமெரிக்கா உலகளாவிய ரீதியில் குறிப்பாக மத்திய கிழக்கில் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் ஏற்பட்ட விளைவுகள் அமெரிக்க மக்கள் மத்தியில் சலிப்பை ஏற்படுத்தியுள்ளன.

7 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்கர்கள் 'ஒபாமாவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ததை ஜனநாயப் புரட்சியின் அம்சம் என்றே கூற வேண்டும்.

இப்போது குடியரசுக் கட்சியின் முன்னிலை ஜனாதிபதி வேட்பாளர் ரொனால் ட்ரம்ஸ் தனது தேர்தல் வெற்றிக்காக இனவாத அரசியலை முன்னெடுக்கிறார். 1930 களில் ஹிட்லரின் யூத விரோத தேசிய வாதத்தின் சாயல் அமெரிக்க தேர்தலிலும் தெரிகிறது.

மறுபுறம் யுத்த செலவினங்களைக் குறைப்பது அதன் மூலம் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பது போன்ற கருத்துக்களை ஜனநாயகக் கட்சியின் 2 ஆம் நிலை வேட்பாளர் பெனி சண்டர்ஸ் வலியுறுத்தி வருகிறார். அவருக்கு அமெரிக்காவின் இளைய தலை முறையினர் மத்தியில் ஆதரவு காணப்படுகிறது.

கட்டற்ற வகையில் அமெரிக்காவினுள் ஆயுதங்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டிருப்பதுவும் பாடசாலைகளில் அடிக்கடி துப்பாக்கிச் சம்பவங்கள் பெருகுவதற்குக் காரணம் என்கிறார்கள். இதனால் தனி மனிதர்களுக்கு ஆயுதங்கள் வழங்குகின்ற அனுமதிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்க மக்கள் மத்தியில் வலுப் பெற்று வருகின்றன.

கலகம் அடக்கும் செயற்பாடுகள் என்ற போர்வையில் பொலிஸின் நடவடிக்கைகள் பெரும்பாலும் கறுப்பு இனத்தவர்கள் மீது படுகொலைகளைக் கட்டவிழ்த்து விடும் செயல்களாகவே கருதப்படுகின்றன.

வளருகின்ற இளம் பிள்ளைகள் மத்தியில் நிலவும் வன்முறை மனோபாவத்திற்கு காரணம் என்ன என்பது பற்றிய சர்ச்சைகளும் அங்கு தொடர்கின்றன.

அமெரிக்க தேர்தல் பரப்புரையில் இவை முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

கொல்லப்பட்ட பாடசாலைப் பிள்ளைகளுக்காக ஒபாமா கண் கலங்கினார். ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், அமெரிக்காவின் நீர் வளங்களைப் பாதுகாப்பதற்குமான விடயங்களில் ஒபாமா தனது சிறப்பு அதிகாரங்களைப் பிரயோகிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

ஆபிரகாம் லிங்கனிலிருந்து மாட்டின் லூதர் கிங் உட்பட்ட காலம் வரையான அமெரிக்க மரபுகள், வாழ்க்கை முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கண்ட உயர் விழுமியங்களைப் புறக்கணிப்பதாக ஒபாமா தமது இறுதியான காங்கிரஸ் உரையில் கடுமையாக விமர்சித்திருகிறார்.

ஒபாமாவின் காலம் கியூபாவுடனான ராஜதந்திர உறவுகளைப் புதுப்பித்துதிருக்கின்றன. ரொனால்ட் ட்ரம்ஸ் வகையறாக்கள் ஜோர்ச் புஸ்சின் வழியை மேலும் மோசமான வழியில் பின்பற்றி மேலாக ஒருபடி செல்ல முயன்றாலும் மறுபுறம் யுத்த எதிர்ப்பு மற்றும் பேரினவாத எதிர்ப்பு சக்திகளும் அமெரிக்காவின் பிரதான அரசியலில் தொழிற்படத் தொடங்கியிருக்கின்றன. குடியரசுக் கட்சியைச் சேர்ந்த இந்திய பூர்வீகத்தைக் கொண்ட ஹெய்லியும் ஜாடை மாடையாக ட்ரம்ஸை குறைப்பட்டுக் கொண்டார்.

யுத்த எதிர்ப்பாளர்களான பேராசிரியர் நோம் சோம்ஸ்கி போன்ற அறிஞர்கள் அமெரிக்காவின் உலக பொலிஸ்காரன் போக்குக் கொண்ட பொருளாதாரக் கொள்கை, நாடுகளுடனான உறவுகள் பற்றி கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

உலக யுத்தத்திற்கான மாற்றங்கள் மாத்திரமல்ல உலக அமைதிக்கான நம்பிக்கை கொள்ளத்தக்க மாற்றங்களும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்தப் போராட்டத்தில் எவரை எவர் வெல்லுவாரோ!.

# ஒற்றையாட்சிக்கு உள்ளேதானாம் அரசியற் ...

1 ம் பக்கத் தொடர்ச்சி

அரசாங்கத்திற்கு எதிரான சிங்கள மக்களின் ஒரு கிளர்ச்சி எழுச்சியாகவே கருதப்படும். அது மீண்டும் ராஜபக்ஸாக்களை சுலபமாக அரச அதிகாரத்தில் ஏற்றிவைத்து விடும். இதன் காரணமாகவே இப்போது உள்ள அரசாங்கம் ஒற்றையாட்சியை நீக்குகிற முயற்சியில் இறங்கத் தயாராக இருக்க மாட்டாது என்பது தெளிவான ஓர் விடயமாகும்.

## தமிழர்களின் நிலையும் நினைப்பும்

தமிழர்கள் மத்தியிலிருந்த ஆயுதப் போராட்ட இயக்கங்கள் வலுவாக செயற்பட்ட காலம் முடிந்து விட்டது. அந்தக் காலத்தில் ஒற்றையாட்சியை நீக்குவதற்கு மட்டுமல்ல சமஸ்டி அமைப்பை ஏற்படுத்துவதற்கும் சிங்களத் தலைவர்கள் தயாராக இருந்தார்கள். தமிழர்களுக்குப் பிரிவினையைத் தவிர வேறு எதனைக் கொடுத்தாயினும் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்தால் போதும் என்ற நிலையிலேயே பரந்து பட்ட சிங்கள மக்கள் இருந்தார்கள். ஆனால், இப்போது நிலைமை அதுவல்ல.

இன்று உள்ள நிலையில் பெரும்பான்மையான சிங்கள மக்களின் ஆதரவு இல்லாமல் தமிழர்களுக்கு ஓர் அரசியல் தீர்வு கிடைக்க முடியாது. பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவினைப் பெறமுடியாத ஒற்றையாட்சி நீக்கப்பட வேண்டும், சமஸ்டி முறையிலான தீர்வே தமிழர்களுக்கு வேண்டும். என்ற சுலோகங்களையே தமிழர்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க தேர்தல் வெற்றித் தலைவர்கள் உறுமிக் கொண்டு இருக்கிறார்கள்.

## குழப்பமான முழக்கங்கள்

ஒற்றையாட்சி வேண்டாம்! சமஸ்டியே வேண்டும்! என்ற சங்கநாதம் முழங்கலாம் அது எப்படிக்கிடைக்கும்! அதை எப்படிப் பெறமுடியும்! அதை யார் பெற்றுத் தருவார்கள்! என்ற கேள்விகளில் ஒன்றிற்குக் கூட திருப்திகரமான பதிலைத் தரமுடியாத தேர்தல் வெற்றிப் பிரமுகர்களின் முழக்கங்களால் என்ன பயன் தமிழர்களுக்கு கிடைக்கும் என்பது இன்றைய கேள்வியாகும்.

சர்வதேச சமூகம் வரும்; எங்களோடு நிற்கிறது அது எங்களுக்கு வேண்டிய வற்றை எடுத்துத் தரும் என்று சொல்லப்படுபவை பொய்யாகிப் போன பழம் கதை என்பது இன்று தெளிவாயுள்ளது.

இந்தியாவையும் பிரித்தானியாவையும் அமெரிக்காவையும் தான் வெள்ளை வேட்டி கட்டிய தமிழ் பிரமுகர்கள் சர்வதேச சமூகம் என்று குறிப்பிடுகிறார்கள் என்பது தெள்ளத் தெளிவான விடயமாகும். இந்த நாடுகள் எல்லாம் இலங்கையின் அரசியல் யாப்பில் 1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தினை முழுமையாக நிறைவேற்றும்படியே கூறுகின்றன.

இந்த சர்வதேச சமூகம் ராஜபக்ஸாக்களை ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும் என்று எடுத்த முயற்சிகள் எல்லாம் அதற்காக அவை நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்த வேலைகள் எல்லாம் தமிழர்களுக்குச் சமஸ்டித் தீர்வைப் பெற்றுத் தருவதற்காகவே மேற்கொள்ளப்பட்டன என்று தமிழர்கள் நினைத்தால் அது தப்பாகவே முடியும். தாங்கள் நினைத்ததை சர்வதேச சமூகம் செய்து தரவில்லை என்று கோபப்பட்டாலும் அந்தக் கோபங்கள் அந்த் நாடுகளைப் பொறுத்தவரையில் அரை செப்புச் சல்லிக்கும் பெறுமதியற்றவையாகவே இருக்கும்.

## சமஷ்டி சிறந்தது! யதார்த்தம் வேறு!

சமஸ்டி அடிப்படையிலான தீர்வு சரியானதா? பிழையானதா? என்ற விவாதத்திற்கே இங்கு இடமில்லை. இலங்கை யின் இனப்பிரச்சினை ஒரு சமத்துவ அடிப்படையில் ஒரு ஜனநாயக நாகரிக அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதற்கு சமஸ்டி முறையே சிறந்தது என்பதில் மாறுபட்ட கருத்து இங்கு இல்லை. ஒற்றையாட்சி என்பது நீக்கப்பட்டு குறைந்த பட்சம் இந்தியாவிலிருப்பது போன்ற ஆட்சியமைப்பு முறை இங்கு கொண்டு வரப்படுவதே சிறந்தது என்பது மறுக்கப்பட முடியாத ஒன்று.

ஆனால், சிங்களத் தலைவர்களை அவ்வாறான தீர்வுகளை ஏற்க வைக்கக் கூடிய நிலையில் தமிழர்களின் தலைமைகள் இல்லை. இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை என்பன 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றே ஜெனீவாத் தீர்மானத்தின் மூலம் வெளியிட்டுள்ளன. சமஷ்டியையோ அல்லது ஒற்றையாட்சியை நீக்குவது பற்றியோ அவை பேசவில்லை. பேசவும் மாட்டா என்பது தெளிவாகத் தெரிகின்றது.

## ஒற்றையாட்சியை ஏற்பதா? இல்லையா?

இவையெல்லாவற்றையும் பார்க்கையில் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட அரசியற் தீர்வுக்கான சாத்தியங்களே அதிகமாக உள்ளன. சமஷ்டியே வேண்டும்! ஒற்றையாட்சிக்குள் தீர்வு வேண்டாம் என்று கூறுகின்ற தேர்தற் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட வகையான தீர்வு தான் என அரசாங்கம் முடிவு செய்தால் என்ன செய்வார்கள். அதனை ஏற்றுக் கொள்ளப் போகிறார்களா அல்லது அதனை வேண்டாம் என நிராகரிக்கப் போகிறார்களா என்பதே இன்றுள்ள கேள்வி.

13ஆவது திருத்தம் வந்து 25 ஆண்டுகளாக அது வேண்டாம்! அதனால் தமிழர்களுக்கு எந்தப் பயனும் கிடையாது! 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம்! என்றெல்லாம் முழக்கமிட்டு தமிழ் மக்கள் மத்தியில் மாகாண சபைக்கு எதிரான எண்ணங்களை வளர்த்தவர்கள் தான் இப்போது மாகாண சபையின் அதிகாரத்தில் குந்தியிருந்து மாகாண சபை பதவிகளால் கிடைக்கும் சுகங்களை மட்டும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாகாண சபை அதிகாரமற்றது அதனால் மக்களுக்கு எதுவும் செய்ய முடியாது என்று கூறுபவர்கள். இன்று அதே மாகாண சபையின் பதவிகளை வைத்து ஊழல்களிலும் நிதி மோசடிகளிலும். ஈடுபட்டு பொது மக்களின் பணங்களை சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள். இதேபோல நாளைக்கும் ஒற்றையாட்சிக்குள் வரும் மாகாண சபையின் பதவிகளைப் பிடிப்பதற்கு போட்டி போட்டு தமது சுயநலங்களை வளர்த்துக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

"சமஷ்டியைத் தவிர வேறெதனையும் ஏற்க மாட்டோம்", "ஒற்றையாட்சிக்குள்ளான தீர்வினை ஏற்க மாட்டோம்" என்று இன்று கூறுபவர்கள் ஒற்றையாட்சிக்குள்ளே தீர்வு வந்தால் என்ன செய்வார்கள்? உடனேயே தமது பதவிகளைத் தூக்கியெறிவார்களா?

ஒற்றையாட்சிக்கு உட்பட்ட மாகாண சபைகளின் பதவிகளுக்கு இனிமேல் எக்காலத்திலும் போட்டி போட மாட்டோம் என மக்களுக்கு பகிரங்கமாகச் சத்தியம் செய்வார்களா?

## கேட்டது கிடைக்கவிடில் தம்மை அர்ப்பணித்துப் போராடுவார்களா?

ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வைத் தான் அரசு முன்வைத்தால் அதனை ஏற்காமல், அதற்கான தேர்தல்கள் எதிலும் போட்டியிடாமல், அதற்கு எதிராக சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து தமது குடும்பம் பதவி சுகங்களையெல்லாம் துச்சமெனத் தூக்கியெறிந்து விட்டு வீதிகளில் இறங்கி மக்களை அணி திரட்டி "சிறைச்சாலை பூஞ்சோலை , "அரச துப்பாக்கிகளுக்கு அஞ்சமாட்டோம், "உயிர் தமிழனுக்கு உடல் மண்ணுக்கு" என எத்தனை வருடங்கள் ஆனாலும் விடாப்பிடியாகப் போராடுவோம் என அஹிம்சா வழியில் களம் இறங்குவார்களா?

சும்மா பம்மாத்து விடும் சுலோக அரசியலே இங்கு மக்களை ஏமாற்றுகிறது. இந்த ஏய்த்துப் பிழைக்கும் போலி அரசியலை விட்டுவிட்டு தமிழ்த் தலைவர்கள் தங்களை நம்பி வாக்களித்த தமிழ் மக்களுக்கு விசுவாசமாக அவர்களின் அடிப்படை அபிலாஷைகளுக்கு உரிய வகையில் இன்றைய காலத்தின் சூழலுக்கேற்ப செயற்படுவது அவசியமாகும்.

அரசாங்கத்திடம் சமஷ்டிக் கோரிக்கையை முன்வைப்பதோ அல்லது ஒற்றையாட்சி முறையை நீக்கும்படி கோருவதோ தவறில்லை. ஆனாலும் ஒற்றையாட்சி முறைக்குள் தான் தீர்வு வரும் நிலையே உண்டென்றால், அவ்வாறு வரும் தீர்வு மக்களுக்குப் பயனுடைய, வலுவான, செயலாற்றல் கொண்ட மாகாண சபையைப் பெறுகின்ற விதமாக அமைய வேண்டும் என்பதில் தமிழர் பிரதிநிதிகள் அக்கறை காட்ட வேண்டும். இல்லையென்றால் 13ஆவது திருத்தம் எப்படி வந்ததோ அவ்வாறான ஒரு மாகாண சபையே மீண்டும் தமிழர்களின் தலையில் வந்து விழும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுசிலுப்புத் தேவையில்லை

## தமிழர்களுக்குப் பலகாரமே வேண்டும்



டட்லி சேனநாயக்கா S.W.R.D பண்டாரநாயக்கா S.J.V. செல்வநாயகம் G.G. பொன்னம்பலம் அ. அமிர்தலிங்கம்

இலங்கைக்குப் புதிய அரசியமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்கான முஸ்தீபுகள் முடுக்கி விடப்பட்டுள்ள இன்றைய நிலையில் தமிழ்ச் சூழலில் ஒற்றையாட்சியா? சமஸ்டியா? தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ற சர்ச்சைக்குள் தமிழர்களுடைய அரசியல் அரங்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் கடந்தகால அரசியலிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

### தமிழ்த் தலைமைகளின் கடந்த காலக் கோரிக்கைகள்

1940 களில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி பொன்னம்பலம் அவர்கள் இலங்கைக்கான சோல்பரி அரசியமைப்பு உருவாக்கத்தின் போது "ஐம்பதுக்கு ஐம்பது" கோரிக்கையை முன் வைத்தார். இது நிறைவேறவில்லை. இக்கோரிக்கை தோல்வியிலேயே முடிந்தது.

அதன் பின்னர் ஜி.ஜி பொன்னம்பலம் அவர்களுடனான அரசியல் முரண்பாடு காரணமாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து வெளியேறிய எஸ்.ஜே.வி செல்வநாயகம் (தந்தை செல்வா) அவர்கள் 1949 இல் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்துத் தமிழர்களின் இனப்பிரச்சனைக்குத் தீர்வாகச் "சமஸ்டி" க் கோரிக்கையை முன்வைத்தார்.

தனது அரசியல் இலக்காகச் "சமஸ்டி"யை வரித்துக் கொண்டிருந்த சமகாலத்திலேயே தந்தை செல்வா அவர்கள் பிராந்திய சபைகளை ஏற்று 1957 இல் பண்டா–செல்வா ஒப்பந்தத்தையும், 1965 இல் மாவட்ட சபைகளை ஏற்று டட்லி–செல்வா ஒப்பந்தத்தையும் மேற்கொண்டார்.

### ஒற்றையாட்சி பற்றி அக்கறை செலுத்தாத தீர்வுகள்

1970 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஆட்சியமைத்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் அதுவரையில் அமுலில் இருந்த சோல்பரி அரசியலமைப்பை நீக்கி 1972 இல் குடியரசு அரசியலமைப்பை அறிமுகம் செய்தார்.

1947 இலிருந்து 1972 வரை அமுலிலிருந்த சோல்பரி அரசியலமைப்பில் ஒற்றையாட்சி என்ற பதம் இருக்கவில்லை. ஆனால் அது ஒற்றையாட்சிக் குணாம்சத்தைக் கொண்டிருந்தது.

அமரர் ஜி.ஜி பொன்னம்பலம் அவர்களின் "ஐம்பதுக்கு ஐம்பது" கோரிக்கையோ அல்லது பண்டா-செல்வா ஒப்பந்தமோ அல்லது. டட்லி–செல்வா ஒப்பந்தமோ சட்டமாக்கப்பட்டு அமுல் செய்யப்பட்டிருக்குமேயானால் அவை ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் தான் நிகழ்ந்திருக்கும்.

1972 குடியரசு அரசியலமைப்பிலும் ஒற்றையாட்சி என்ற சொற்பதம் இல்லை. ஆனால் அதுவும் சோல்பரி அரசியலமைப்பைப் போல் ஒற்றையாட்சிக் குணாம்சத்தையே கொண்டதாகும்.

1972 இல் தமிழரசுக் கட்சி, அரசாங்கத்திடம் சமர்ப்பித்த ஆறு அம்சக் கோரிக்கையும் அப்போதைய அரசியலமைப்பு நிர்ணய சபையில் முன்மொழிந்த திருத்தங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சட்டமாக்கப்பட்டிருக்குமேயானால் அவையும் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் தான் நிகழ்ந்திருக்கும்.

### தமிழீழ அரசியலமைப்பு காற்றில் போன வாக்குறுதி

1972 குடியரசு அரசியலமை ப்பைத் தொடர்ந்து அவ்வரசியலமைப்பின் நகலை யாழ்ப்பாணத்தில் தீயிட்டுக் கொளுத்தித் தமிழர்களின் எதிர்ப்பை வெளியிட்ட தந்தை செல்வா அவர்கள் தமிழரசுக் கட்சியையும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியையும் இணைத்து தமிழர் கூட்டணியை உருவாக்கினார். அதுவே பின்னர் 1976 வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியாகித் தமிழர் தரப்பில் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தது. 1977 பாராளுமன்றப் பொதுத் தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாகப் பிரகடனம் செய்த தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத் தனிநாடு அமைப்பதற்கான ஆணையைத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உள்ளடக்கி தமிழ் மக்களிடமிருந்து ஆணை பெற்றது. தேர்தலில் வென்ற பின்னர் அனைத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து தமிழ்த் தேசிய மன்றத்தை நிறுவி தமிழீழத் தனி நாட்டிற்கான அரசியலமைப்பை வரைவோம் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளித்த தமிழர் விடுதலைக் கூட்டணி அதனைச் செய்யவில்லை. தந்தை

**தம்பிய்யா கோபாலகிருஸ்ணன்**

செல்வாவின் மறைவுக்குப் பின்னர் 1977 பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் பொறுப்பினை மு.சிவசிதம்பரம் அவர்களும் செயலாளர் நாயகம் பொறுப்பினை அ.அமிர்தலிங்கம் அவர்களும் ஏற்றிருந்தனர்.

1977 தேர்தலில் வெற்றி பெற்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் பிரதமராகி ஆட்சியமைத்த ஜே.ஆர் ஜெயவர்த்தனா அவர்கள் 1978 இல் குடியரசு அரசியலமைப்பை நீக்கித் தற்போதுள்ள நிறைவேற்று ஜனாதிபதிமுறை அரசியலமைப்பை ஏற்படுத்தி அவரே இலங்கையின் முதல் நிறைவேற்று ஜனாதிபதியாகவும் பதவியேற்றார். இவ்வரசியலமைப்பு ஆக்கத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பங்கேற்காமல் பாராளுமன்றத்திலிருந்து வெளியேறியிருந்தது. 1978 நிறைவேற்று ஜனாதிபதி முறை அரசியலமைப்பில்தான் முதல் முறையாக ஒற்றையாட்சி என்ற பதம் எடுத்தாளப்பட்டது.

### 13ஆவது திருத்தம் மட்டுமே சட்டவடிவிலான தீர்வு

1987 யூலை 29 இல் கைச்சாத்திடப் பெற்ற இந்திய- இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட 13வது அரசியல் சட்டத் திருத்தமும் அதன் கீழ் நிறுவப்பட்ட -தற்காலிகமாக இணைக்கப்பட்ட- வடக்கு கிழக்கு மாகாணசபையும் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள்ளே தான் நிறைவேற்றப்பட்டன.

அது முழுமையாக அமுல் செய்யப்படாமைக்குச் சிங்கள அரசாங்கங்களை மட்டும் குறை சொல்ல முடியாது. தமிழர் தரப்பின் அரசியல் தந்திரோபாயம் அற்ற - விவேகமற்ற செயற்பாடுகளும் தமிழர் அரசியல் தலைமையினது சமூகப் பொறுப்பற்ற அசமந்தங்களும் 13 ஆவது அரசியல் சட்டத்திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்படாமைக்குரிய காரணங்கள் என்பதைத் தமிழர்கள் நேர்மையாக ஒப்புக் கொள்ளுதல் வேண்டும்.

இன்று எல்லோரும் கூறுகின்ற "நல்லாட்சி" அரசியல் சூழலில் இப்போது அரசியல் அரங்கில் பேசு பொருளாக இருக்கின்ற உத்தேச புதிய அரசியலமைப்பு பற்றிக் கவனம் செலுத்துகின்ற சமகாலத்தில் உத்தேச புதிய அரசியலமைப்பு வரை காத்திராமல் பதின்மூன்றாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தினை முழுமையாக அமுல் செய்வதற்கான அரசியல் மற்றும் இராஜதந்திர அழுத்தங்களைத் தற்போதைய தமிழர் அரசியல் தலைமையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்க வேண்டும்.

ஏனெனில், இலங்கை அரசியல் வரலாற்றில் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளாகப் பேசப்பட்ட ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையும் சரி அல்லது பண்டா–செல்வா ஒப்பந்தம் சரி அல்லது டட்லி - செல்வா ஒப்பந்தம் சரி அல்லது 2000 ஆம் ஆண்டு சந்திரிகா விஜயகுமாரதுங்க பண்டாரநாயக்காவினால் முன்மொழியப்பட்ட அரசியல் தீர்வுப் பொதியும் சரி, இவையெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காயாக அமைந்தனவே தவிர அவை சட்ட வடிவமாக்கப்பட்டு அமுல் செய்யப்படவில்லை. இதுவரை சட்ட வடிவமாக்கப்பட்ட ஒரேயொரு ஒப்பந்தம் இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம்தான் என்பதை தமிழர்கள் நேர்மையோடு ஒப்புக்கொள்ள வேண்டும் .துரதிஸ்ட வசமான விடயம் என்னவெனில் தமிழர்தம் அரசியல் தலைமையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 13 ஆவது அரசியலமைப்புச் சட்டத்திருத்த அமுலாக்கல் குறித்து எப்போதும் அடக்கியே வாசிக்கிறது. அல்லது அது பற்றிப் பேசுவதேயில்லை.

### ஒற்றையாட்சியா? சமஸ்டியா? என்பது பிரதானமல்ல

நாம் விரும்புவது வேறு: நிலவுகின்ற யதார்த்தம் வேறு. நாளை வரும் பலாக்காயிலும் இன்று கையிலுள்ள கிளாக்காய் நன்று. 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை முற்றாகப் புறந்தள்ளி விட்டு வேறொரு அரசியல் தீர்வுத் திட்டத்தினை அடைவது நடைமுறைச் சாத்தியமில்லை. இறைச்சி சாப்பிட்டதைக் காட்டுவதற்காக எலும்புகளைக் கோர்த்து மாலையாக அணிய வேண்டுமென்பதில்லை. தேசம், தாயகம், சுயநிர்ணய உரிமை போன்ற கோட்பாடுகளைக் கோஷங்களாக முன்வைப்பதை விடவும் அவற்றை அடைவதற்கான அறிவுபூர்வமான அரசியல் நகர்வுளை மேற்கொள்வதே அவசியமானது.

ஒற்றையாட்சியா? சமஸ்டியா? என்பதை விட வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் பிரிக்கப்படாத ஒரு அதிகாரப் பகிர்வு அலகும் அதாவது ஒரு மொழிவாரி மாகாணமும் அவ்வலகுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்களுமே முக்கியமானவை. அண்மையில் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் முழுமையான அமுலாக்கலையே வலியுறுத்துகிறது. தற்போது நடைமுறையில் உள்ள 13ஆவது சட்டத் திருத்தத்திலுள்ள குறைபாடுகள் உத்தேச புதிய அரசியல் அமைப்பில் நிவர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

எனவே பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அதிகாரப் பகிர்வின் அடுத்த கட்டத்திற்குச் செல்வதே இன்றுள்ள தென்னிலங்கை - இந்து சமுத்திரப் பிராந்திய மற்றும் பூகோள அரசியல் சூழ்நிலையில் அறிவு பூர்வமானது. கோவணம் உருவப்பட்டுக் கொண்டிருக்கும் போது பட்டு வேட்டிக்குக் கனவு காண்பது அறிவுபூர்வமானதல்ல. உத்தேச புதிய அரசியலமைப்பு மூலம் தமிழர்களுக்கு மீட்சி கிடைக்கும் என்று அதீத நம்பிக்கை கொள்வதை விட தற்போது கையிலிருக்கின்ற பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தினை முழுமையாக அமுல் செய்வதற்கான அரசியலே தமிழர்களின் உடனடித் தேவையாகும். ●

### யாழ், கிளிநொச்சி விவ...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

'உரிய காலத்தில் விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகள் சம்பந்தப்பட்டவர்களால் வடங்கப்படவில்லை என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

மீசாலை கமநல சேவைகள் நிலையத்தில் விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்க கொண்டுவரப்பட்ட அமோனியா உரம் பெருமளவில் காணப்படுகின்ற போதிலும் தமக்கு வழங்க மறுக்கப்படுகிறது என விவசாயிகள் புகார் தெரிவிப்பதாக உதயன் பத்திரிகை ஜனவரி 8ம் திகதி செய்தி வெளியிட்டிருந்தது. ஜனவரி 1ம் திகதி உரம் பெறுவதற்கு கமநலச் சேவை நிலையத்திற்குச் சென்ற விவசாயிகளை மறு நாள் வருமாறு கூறியதாகவும் மறுநாள் சென்ற போது தலைமைப் பீடத்திலிருந்து அறிவித்தல் வரும்வரை விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது குறித்து மீசாலை கமநல சேவைகள் நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது ஜனவரி 6ம் திகதி தொடக்கம் அமோனியா உரம் விவசாயிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் உதயன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

நெற் பயிருக்கான அனைத்து பசளைப் பிரயோகமும் 4 - 4 1/2 மாத நெல் இனமாயின் விதைத்து 8 வாரத்திற்கு முன்னரும் 3 – 31/2 மாத நெல் இனமாயின் விதைத்து 7 வாரங்களுக்கு முன்னரும் அனைத்து பசளைகளும் இடப்பட வேண்டும் என கமநல சேவை நிலைய விளம்பரப் பலகை ஒன்றில் பார்த்த ஞாபகம். இவ் அறிவுறுத்தலின்படி செயற்படுவற்கு உரிய காலத்தில் உரவிநியோகம் இடம்பெறவில்லை என்பதை பத்திரிகை செய்திகளின் படியும் அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

இவ் வருட காலபோக நெற் செய்கையின் போது தனியார் கடைகளில் உர வகைகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டது பற்றியும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். 1200 ரூபா பெறுமதியான 50 கிலோ யூரியா பொதி 1700 ரூபாவிற்கு விற்கப்பட்டதாகவும் இதற்கான பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படவில்லை என்பதும் விவசாயிகளின் குற்றச்சாட்டாகும். இதுகுறித்து யாழ் மாவட்டத்தின் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களமோ, வடக்கு மாகாண விவசாய அமைச்சோ எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனவும் குறைப்பட்டுக் கொண்டனர். எதிர்காலத்திலாவது இந்தக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

இதேவேளை வடக்கு மாகாணசபையின் விவசாய அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்களுக்கு 2015 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நன்கொடை நிதியாக 193 மில்லியன் ரூபாவும், பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியாக 14.5 மில்லியன் ரூபாவுமாக ஒதுக்கப்பட்ட நிதி திறைசேரிக்கு திரும்பிச்செல்லாத வகையில் திட்டமிட்டபடி முழுமையாகச் செலவிடப்பட்டதாகவும் 2016 நிதியாண்டிற்கென 436.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

### கருத்தரங்கு : அரசியல் ...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

**தமிழ் சமூகத்தின் நன்மை தீமைகளோடு தொடர்ச்சியாகச் சம்பந்தப்பட்டவர்கள் என்ற வகையில் எமக்கு சமூகப் பொறுப்புள்ளது. இந்த நாட்டு மக்கள் அனைவரதும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அரசியல் யாப்பே உயர்ந்தது என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். கடந்தகாலங்களில் அரசியல் யாப்பு உருவாக்கத்தின் போது மக்களின் கருத்துப் பற்றி யாரும் அக்கறைப்படவில்லை. கருத்துக் கேட்கப்பட்டிருப்பது முன்னேற்றம். ஒற்றையாட்சிக்குள் வருகின்ற தீர்வுக்குள்ளும் அதிகாரங்களை தெளிவாக அரசியல் யாப்பில் குறிப்பிடச் செய்யவேண்டும். தமிழர் தரப்பு முன்னர் இவ்வாறு செய்திருந்தால் 13 ஆவது திருத்தம்கூட இவ்வாறு வந்திருக்காது. இழைத்த தவறுகளின் அனுபவத்திலிருந்து தான் இன்று இதனைக் குறிப்பிடுகிறோம். சமஸ்டிக் கோரிக்கையை கைவிட வேண்டியதில்லை எனத் தெரிவித்தார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவை நோக்கிய பயணம் தடைப்படாது முன்னேற வேண்டும்

அரசியல் யாப்புச் சீர்திருத்தத்துக்கான முன்னெடுப்புகள் பிரதானமாக இலங்கையின் சமூகங்களின் வாழ்வை ஜனநாயகப் படுத்தும் முயற்சிகளே.

தமிழ்த் தரப்பிலிருந்து அதிதீவிர நிலைப்பாடுகள் இந்த விடயத்தைக் கடினமாக்கி விடக் கூடாது. விருப்பங்களுக்கும் யதார்த்தங்களுக்கும் இடையே உள்ள இடைவெளி புரிந்து கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். வெவ்வேறு சமூக சக்திகள் இதனைக் கருத்தில் கொண்டு இன்று அடையக் கூடியவற்றை அடைய முயற்சிக்க வேண்டும்.

### சாதகமான சூழல் நீடிக்க வேண்டும்

பிரமாண்டமான இராணுவத்தை வைத்திருப்பதோ அல்லது இராணுவம் மக்களின் நிலங்களைத் தமது பிடியில் வைத்திருப்பதோ அல்லது இனவாத சக்திகள் தலையெடுப்பதோ இன்றைய இலங்கையின் ஆளும் தரப்பினருக்குக் கூட பிடித்தமான விடயங்கள் அல்ல.

காணிகள் விடுவிக்கப்படுவதற்கும் படிப்படியாக இராணுச் சூழல் தளர்த்தப் படுவதற்குமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இருண்ட சக்திகளின் நிலைகளை நலிவடையச் செய்யும் முயற்சிகளும் மேற் கொள்ளப் படுகின்றன.

ஜனாதிபதி கால் நூற்றாண்டுகளாக இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களில் சிலரை முகாம்களுக்குச் சென்று நேரில் சந்தித்திருக்கிறார். உணர்வு பூர்வமாகவே அந்த மக்கள் தொடர்பான தனது கரிசனைகளை வெளிப்படுத்தி இருக்கிறார்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் நாடளாவிய அளவிலும் வடக்கு கிழக்கிலும் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள பிரதமர் ரணில் அழைப்பு விடுத்திருக்கிறார்.

தலைமன்னாார் இராமேஸ்வரத்திற்கிடையில் பாலம் அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. வடக்கில் ஒரு சர்வதேச விமான நிலையம் அமைவதற்கான வாய்ப்பு அதிகரித்துக் காணப்படுகிறது.

இவை யதார்த்தமானால், இலங்கையின் சமூக பொருளாதார அரங்கில் பாரிய அளவில் சாதகமான தாக்கங்களைச் செலுத்தக் கூடியவை. இங்கு வேலைவாய்ப்புக்கள் அதிக அளவில் உருவாக்கப்படும் நிலைமைகள் ஏற்படும்.

அதற்கு அவசியமான உள்ளக கட்டமைப்புகள் மேலும் விருத்தி அடையும். அது தொழில் துறைகள் மற்றும் உல்லாசப் பயணத்துறை ஆகியவற்றில் வளர்ச்சிகளுக்கு உந்துதலாகும்.






அதனால் கல்வி சுகாதாரம் ஆகியவற்றில் புதிய சிகரங்களை எட்டக் கூடிய நிலைமைகள் ஏற்படும்.

இலங்கையர்கள் இனரீதியான பிரதேச ரீதியான தீவுச் சிந்தனைகளிலிருந்து விலகி அதற்குப் பதிலாக பரந்த ஒரு தளத்தில் இயங்குபவர்களாக ஆக வேண்டும்.

சிங்கப்பூர் மாதிரி இலங்கையும் மாறவேண்டும் என்று பிரதமர் ரணில் எதிர்பார்க்கிறார். உண்மையில் இலங்கையின் அனைத்து சமூகங்களும் இணைந்து இயங்குவதற்கான நிலைமைகள் உருவாக்கப்படுவதனாலேயே இது சாத்தியமாகும்.

சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இலங்கையின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது பிரதானமாக இனரீதியான முரண்பாடுகள் தான். எனவே இலங்கையில் சமூகங்களுக்கும் பிராந்தியங்களுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது இங்கு முக்கியமான விடயம். இதனை சகல மக்களிடமும் விரிவாக எடுத்துச் செல்ல வேண்டும்.

மத-இனவாத கருத்துகள் வலுவடைந்த அரசுகள் உலகில் வெற்றிகரமானவை அல்ல. அவை சீரழிந்து சிதைந்து போயின. இன்னும் இருப்பவை சிதைந்து கொண்டிருக்கின்றன. இன்று அவை அடிப்படைவாத சக்திகளால் சீர்குலைக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய சக்திகள் சகோதரத்துவத்திற்கும்- மனிதகுலத்திற் கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளன.

வெற்றிகரமான பாதையில் செல்வதானால், இந்த நாட்டின் தொலை தூரங்களில் வறுமையில் வாழும் மக்களின் பிரச்சனைகள் உள்வாங்கப்படவேண்டும்.

தெற்காசியப் பிராந்திய அளவிலும் நாம் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டிய அவசியங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக இந்திய உபகண்ட அளவில் நாம் இணைந்து செயற்படுவதன் மூலமே இந்த நாட்டை ஒரு முக்கியத்துவம் மிக்க ஒன்றாக மிளிர வைக்கவும், பாரிய சமூக பொருளாதார மாற்றங்களை இங்கு நிகழ வைக்கவும் வழிகள் ஏற்படும்.

சர்வசன வாக்குரிமையை முதன் முதலில் அறிமுகம் செய்தவர்கள், இலவசக் கல்வியை இன்றளவில் பாதுகாத்து வைத்திருப்பவர்கள் என்ற வகையில் இலங்கையர்கள் பெருமை கொள்ள முடியும்.

திறந்த பொருளாதாரக் கொள்கையை தென்னாசியப் பிராந்தியத்தில் முதன் முதலில் அறிமுகப்படுத்திய கட்சியைச் சேர்ந்தவர் தாங்களே எனவும் பிரதமர் பெருமிதப்படுகிறார்.

ஆனால், இலங்கையில் பொருளாதார ரீதியான சமூகப் பாதுகாப்பு இங்கு புறக்கணிக்கப்பட்ட, கவனிக்கப்படாத ஒரு விடயமாக இருந்து வருவதை மறுக்க முடியாது.

பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் பிரபலமடைந்த ஒரு விடயமாக உள்ள "காணாமற் போனோர்" விவகாரம் பல ஆயிரக் கணக்கான பெண்களின் கண்ணீருக்கும் கம்பலைக்குமான விடயமாகவே தொடருகிறது. அந்தக் காணாமற் போனோர் பட்டியலின் பாரிய எண்ணிக்கையானது இலங்கையின் சமூகங்களுக்கிடையேயான நல்லிணக்க வளர்ச்சிக்கு தடையாகவே உள்ளது.

பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகமான அளவிலேயே நடைபெறுகின்றன. லட்சக்கணக்கான பெண்களை வீட்டு வேலையாட்களாக மத்திய கிழக்கிற்கு அனுப்பி வைத்துள்ள நாடும் இதுவே.

உணவு, இருப்பிடம், சுகாதாரம், கல்வி, மின்சாரம், குடிநீர் போன்ற ஜீவாதாரத் தேவைகளை மக்களுக்கு நிறைவாகக் கிடைப்பனவாகச் செய்வதற்கு அதிக தூரம் போக வேண்டியிருக்கிறது.

எமது மரபார்ந்த விவசாயம், மீன்பிடித் தொழில்களை நவீனமயப்படுத்துவது, நேரடி உற்பத்தியாளர்களுக்கு நியாயமான வருமானம் கிடைக்கச் செய்வது, புதிய தொழில் துறைகளை உருவாக்குவது, எமது இயற்கைச் சுற்றாடலின் சமநிலையைப் பேணுவது ஆகியன பெரும் சவால்கள் நிறைந்த பணிகளாக உள்ளன.

புதிய உலகில் எந்த நாடும் தனித்து இயங்க முடியாது என்பதே யதார்த்தமாகும். அன்றாட அனுபவங்களையும் கொண்டு உலகத்தின் போக்குகளுடன் இணைந்தவாறே இயங்க வேண்டிய கட்டாயங்கள் உள்ளன.

சமூகத்தை இருண்ட யுகத்திற்கு அழைத்துச் செல்ல முயலும் சக்திகள் தொடர்ந்தும் விடாப்பிடியாக நின்று கொண்டிருக்கிறார்கள் என்பது அவதானித்தில் இருந்து தவறினால் ஆபத்துக்கள் தவிர்க்கப்பட முடியாதவை ஆகிவிடும்.

இந்த நாடு மீண்டும் இனவாத இரத்தக் காட்டுக்குள் போய்விடாது பாதுகாக்க வேண்டிய இடதுசாரி சக்திகளில் ஒரு பகுதியினர் இந்தக் குழப்ப அராஜக சக்திகள் தொடர்பாக எச்சரிக்கையற்று இருப்பது மட்டுமல்லாது அந்த சக்திகளோடு ஒரு மேடையில் நிற்பது கவலையளிக்கிறது.

மதம், இனம் என்ற பக்கச் சார்புகளுக்குப் பின்னே இலங்கை இழுபட்டுச் செல்லுமானால் அது அரசியல் பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடைய முடியாது தொடர்ந்தும் பின்தங்கிய நிலைக்குள்ளேயே நின்று சுழன்று கொண்டிருக்க வேண்டியேற்படும்.

### முக்கிய பணிகள் பிரதான இலக்குகள்

சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப் பட்டதும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் அமுலுக்கு வரவுள்ளதும், விசேட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வேலைகள் நடந்து கொண்டிருப்பதுவும், இராணுவத்துக்கு வழங்கப்பட்டிருந்த முன்னுரிமை நிலைகளில் படிப்படியாக மாற்றம் ஏற்பட்டு வருவதுவும், புதிய அரசியல் யாப்பிற்கான கதவுகள் திறக்கப்பட்டிருப்பதுவும், அதன் தயாரிப்பில் இலங்கையின் தேசிய சமூகங்கள் அனைத்தும் பங்கேற்பதற்கான வழி வகைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதுவும் இந்த நாட்டின் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை

அண்டைய அயலாருடனும் உலக சமூகங்களுடனும் நெருடல்கள் முறுகல்கள் இல்லாத உறவுகளை வளர்த்தெடுக்கும் முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

சமூக அரசியல் பொருளாதாரத் தளத்தில் எந்தளவுக்கு ஜனநாயக மயப்படுத்தல்கள் இடம் பெறுகிறதோ அதிலேதான் இந்த நாட்டின் வெற்றிகரமான எதிர்காலம் தங்கியிருக்கிறது.

பொருளாதார சமூக இடைவெளிகளைக் குறைப்பது, இன மத சமூகங்களின் சுயமரியாதை, கௌரவம் பாதுகாக்கப்படுவது, மக்கள் அனைவரினதும் அடிப்படை சுதந்திரங்களையும் மனித உரிமைகளையும் உத்தரப்படுத்துவது, இலங்கையின் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் மத்திய தர வர்க்கப் பிரிவினருக்கு கண்ணியமான வாழ்வை ஸ்தாபிப்பது என்பன புதிய அரசியல் யாப்பின் பிரதானமான இலக்குகளாக இருக்க வேண்டும். ●




## கல் கற்காவிட்டால் நீ வெறும் கல்

### மாணவ, மாணவிகளுக்கு கற்றலுக்கான உதவிகளை வழங்கும் நிகழ்வில் கவிஞர் தில்லைமுகிலன் தெரிவிப்பு

"கல்வி சேவை" என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வசதி குறைந்த மாணவ, மாணவிகளுக்கு புத்தகப்பை மற்றும் கொப்பிகள் உட்பட கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு 17.01.2016 அன்று திருகோணமலை பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் காரியாலயத்தில் நடைபெற்றது. பத்மநாபா ஈபிஆர்எல்எவ் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் சத்தியன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முன்னாள் வடகிழக்கு மாகாண சபை முதலமைச்சர் அ.வரதராஜபெருமாள், பத்மநாபா ஈபிஆர்எல்எவ் கட்சியின் பொதுச் செயலாளர் தி.ஸ்ரீதரன், கவிஞர் தில்லைமுகிலன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர். கல்வியின் முக்கியத்துவம் குறித்தும், கல்வியில் மாணவர்களுக்கு ஊக்கத்தை ஏற்படுத்துவது பற்றியும் வருகை தந்திருந்த மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அவர்கள் எடுத்துக் கூறியதுடன் இதனை முன்நின்று செயற்படுத்திய திருகோணமலை மாவட்ட தோழர்களுக்கு பாராட்டுக்களையும் தெரிவித்தனர். தோழர்கள் குமார், பாலு, ஜெயச்சந்திரன், மோகன் திரு. தங்கவேலாயுதம் ஆகியோர் தோழர் சத்தியன் இந்த திட்டத்தை செயற்படுத்துவதற்கு உறுதுணையாய் இருந்தனர். திருகோணமலை மாவட்ட தோழர்களின் ஆக்கபூர்வமான இத் திட்டத்தின் மூலம் நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் நன்மையடைந்தனர்.

தி. சிறிதரன் 294, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [illegible] யாழ்ப்பாணம் கங்கை அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org